Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 06 திங்கட்கிழமை (18.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 141

















# தீர்வு தாமதமடைவதற்கு கூட்டமைப்பே காரணம்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பல முறை நான் அழைத்த போதும் அவர்கள் வந்து இணைந்து கொள்ளவில்லை அதுதான் தீர்வு கிடைக்காது நீண்டு செல்ல காரணம் என அமைச்சரும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் முன்னாள் தலைவரும், லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

யாழ் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் தமிழர்களுக்கு ஒரு தீர்வு வேண்டும் என்று உலகநாடுகளுக்கு எல்லாம் சென்று சொல்கின்றனர் ஆனால் அதனை இலங்கையில் உள்ள அரச தலைவருடன் பேசி இதற்கான ஒரு தீர்வுத் திட்டத்தை வைக்கமுனைவதும் இறுதியில் சிறிய ஒரு பிரச்சினையைக் காரணங்காட்டி வெளியேறுவதுமாக இருந்தால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பால் ஒரு போதும் தமிழர்களுக்கான ஒரு சரியான (19) ஆம் பக்கம் பார்க்க

## வயோதிபரின் சடலம் மீட்பு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதிக்குட்பட்ட பகுதியில் வயோதிபரின் சடலம் ஒன்று கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதி மக்கள் கோப்பாய் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் சடலத்தை மீட்ட பொலிஸார் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சுமார் 65 வயது மதிக்கத்தக்கவர் என்றும், இரண்டு மூன்று நாட்களாக அந்தப் பகுதியில் குறிப்பிட்ட முதியவர் நடமாடியதாகவும் அப் பகுதியில் உள்ள மக்கள் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொதுமக்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் பொறுப்பு

### கொல்வதல்ல என்கிறார் நவிபிள்ளை



இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு காயமடைந்த நிலையில் உள்ள சண்டேலீடர் ஊடகவியலாளர் பரஸ் செளகத் அலிக்கு பாதுகாப்பு அளிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர், (19) ஆம் பக்கம் பார்க்க

## ரணில் தலைமையிலான குழு இனமோதலை தூண்ட முயற்சி

### பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவினர் இன மோதல்களைத் தூண்ட முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் இன உணர்வுகளைத் தூண்டி அதன் மூலம் அரசியல் நடத்த ரணில் குழு ஆயத்தமாகி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தின் பின்னர் படையினரும் அரசாங்கமும் மேற்கொண்டு வரும் அபிவிருத்திப் பணிகளை மறந்து ரணில் தரப்பினர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தந்திரோபாய மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளிலிருந்து படையினர் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள் எனவும், அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வன்னி முன்னரங்கப் பகுதிகளில் படையினர் புலிகளுக்கு எதிராக போராட்டத்தை நடாத்தாமலிருந்தால் ரணில் தரப்பினர் தெல்லிப்பழையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்க் முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் குறித்த பிரதேசங்கள் காணப்பட்டபோது மக்கள் எவ்வாறான நெருக் (19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா மாநாட்டில் பங்கேற்பதற்கு அடுத்த வாரம் தூதுக்குழு பயணம்

### அரசரங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 25 ஆம் திகதி தொடங்கி மார்ச் மாதம் 22 ஆம் திகதி நிறைவடையவுள்ள ஐ.நா.வின் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்துகொள்வதற்கான இலங்கை தூதுக்குழு அடுத்த வார இறுதியில் ஜெனிவாவிற்குச் செல்லவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரொட்னி பெரேரா தெரிவித்தார்.

இலங்கைத் தூதுக்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள் யார் தலைமை தாங்குவார் என்பது தொடர்பாக அடுத்த வாரம் அறிவிக்கப்படும்.

இக் கூட்டத் தொடரில் அமெரிக்காவின் அனுசரணையுடன் இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்று ஜெனிவா பேரவையில் முன்மொழியப்பட்டால், இதில் கலந்துகொள்ளும் இலங்கைத் தூதுக்குழுவினர் 2009 ஆம் ஆண்டு இலங்கையில் பயங்கரவாத யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதற்குப் பின்னர் அரசாங்கம் மேற்கொண்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அங்கு எடுத்துரைப்பதற்குத் தயார்நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும (19) ஆம் பக்கம் பார்க்க

## ஹலால் முறைமை இரத்து பொதுபலசேனா கோரிக்கை



இலங்கையில் ஹலால் முறைமை இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் வெளிநாட்டு மத போதகர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் பொதுபலசேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று கொழும்பு மகரகமவில் இடம்பெற்ற பொதுபலசேனா அமைப்பின் வருடாந்தக் கூட்டத்தின்போதே, அவ்வமைப்பு இக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இலங்கையில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு முஸ்லிம்களின் உலமா சபைகளே காரணம். (19) ஆம் பக்கம் பார்க்க

## குளத்தில் குளித்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று வேலணை யில் இடம்பெற்றுள்ளது.

8ஆம் வட்டாரம் வேலணை மேற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் நிரோஜன் (வயது-18) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை 10.00 மணியளவில் குறித்த இளைஞன் தனது நண்பனுடன் குளத்தில் குளிக்கச் சென்றுள்ளார். குளத் (19) ஆம் பககம் பார்க்க


## கைத்தொலைபேசியில் அச்சுறுத்தி குடும்பஸ்தர் குத்திக் கொலை

### நெடுங்கேணியில் சம்பவம்

வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட மாறாஇலுப்பை பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் நேற்று அதிகாலை குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

மாறாஇலுப்பை, மகிழமோட்டையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகசாமி பிரேமசீலன் (வயது-38) என்ப (19) ஆம் பக்கம் பார்க்க

# கால்நடை வளர்ப்போருக்கு வாகனங்கள் கையளிப்பு



கால்நடை வளர்ப்போருக்கு வடமாகாண ஆளுநரினால் பொதியேற்றும் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதமவிருந்தினராகவும், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹால்டீன், ஜி.ஐ.இசட் நிறுவனத்தின் அபிவிருத்தி சார்ந்த அவசர மற்றும் மாறுதல் உதவித்திட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.குமரகுலரட்ணம் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பொதியேற்றும் மூன்று சக்கர மோட்டார் வண்டிகள் ஆறு மற்றும் மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டன. இவை பால் சேகரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் பால் உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டும் 'ஜி.ஐ.இசட்-டேட்டா' திட்டத்தின் ரூபா 1.825 மில்லியன் நிதியுதவியுடன் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டன. இம்மூன்று சக்கர மோட்டார் வண்டிகளில் இரண்டு கரைச்சி பிரதேச கால்நடை வளரப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரிடமும், ஏனையவை கண்டாவளை, புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று, வவுனியா தெற்கு ஆகிய பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களிடம் வடமாகாண ஆளுநர் கையளித்தார். அத்துடன் ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா 10 பால் கொள்கலன்களும் வழங்கப்பட்டன. மோட்டார் சைக்கிள் கரைச்சி பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டது.

இம் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் பாலானது முதலில் உள்ளூர் மக்களிற்கும் அதிலும் குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்களிற்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் எனவும் மேலதிகமானவற்றையே வெளிச்சந்தைகளில் சந்தைப்படுத்த வேண்டும் என வடமாகாண ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

# மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

(யாழ்.நிருபர்)

'இணுவில் ஒலி' சஞ்சிகையானது மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்த உள்ளது. இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

பத்துவயதுக்குட்பட்ட மாணவர்கள் கீழ்ப்பிரிவில் 'நான்விரும்பும் பெரியார்' என்னும் தலைப்பில் 150 சொற்களிலும், 11 -15 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்கள் மத்திய பிரிவில் 'இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்' என்னும் தலைப்பில் 300 சொற்களிலும், 16-20 வயதுக்குட்பட்ட மாணவர்கள் மேற்பிரிவில் 'இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்' எனும் தலைப்பில் நான்கு 'புல்ஸ்காப்' தாள்களிலும் கட்டுரைகளை எழுதி பாடசாலை அதிபர் ஊடாக 28.02.2013இற்கு முன்கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி - கட்டுரைப்போட்டி, இணுவில் ஒலி, $9,^{2}/_{1}$ நெல்சன் இடம், கொழும்பு -06. சிறந்த கட்டுரையாளர்களுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.(10)

# பழைய மாணவரின் நிதியில் பாடசாலை அபிவிருத்தி

(புலோலி நிருபர்)

ஐரோப்பிய பழைய மாணவர் சங்க ஒன்றிய அனுசரணையில் கரவெட்டி ஸ்ரீ நாரதாவித்தியாலயத்தில் பல இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டமாக சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியில் பாடசாலையின் பெயர் பொறித்த முன்வளைவும், வாயில பகுதிக்கு இரும்புக் கேற்றும் பொருத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இங்கு கல்வி கற்கும் 98 மாணவர்களின் நலன் கருதி மாணவர்களுக்கு பாதணிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக, பழைய மாணவர்சங்கச் செயலாளர் வே.யே[illegible]ராசா தெரிவித்துள்ளார். (61)

# சிரமதானத்தின் மூலம் வடிகான் புனரமைப்பு

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு, புலோலி மத்தி ஆகிய விவசாய அமைப்புக்கள் இணைந்து ஆனைவிழுந்தான் வடிகானை சிரமதானம் மூலம் இன்று முதல் புனரமைப்புச் செய்யவுள்ளனர்.

இவ்வடிகானுக்கு திருநாவலூர், சாளம்பை, சதாவதாணி, ஆகியவற்றினூடாக வெள்ளம் பாய்வதால் வடிகான் திருத்தப்படவேண்டியுள்ளது.

முன்னர் வடிகானில் கழிவுப் பொருட்கள் நிறைந்து அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் இவ்வடிகானில் தேங்கி தோட்டக் காணிகளுக்குச் சென்று பயிர்களை முற்றாக அழித்துள்ளமையால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் இப்படியொரு நிலை ஏற்படாமல் இருக்கவும் மிகுதியாக இருக்கின்ற பயிர்களை காப்பாற்றுவதற்காகவுமே இவ் இரு கமக்கார அமைப்புக்கள் இணைந்து இவ் வடிகானை புனரமைக்க முன்வந்துள்ளன.

முதற்கட்டமாக இவ்வடிகானில் தேங்கிக் கிடக்கும் கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தப்படவுள்ளது. (109)

# கால்கோள் விழா

(புலோலி)

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இவ்வாண்டு முதலாம் தரத்தில் சேர்ந்த மாணவர்களுக்கான கால்கோள்விழா அதிபர் தி. குகநாதன் தலைமையில் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக விவசாயபாட ஆசிரிய ஆலோசகர் செ.கருணாகரன், குடத்தனை பங்குத்தந்தை அருட்திரு.ஜோன் புவியரசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

புதிதாக முதலாம் தரத்தில் சேர்ந்த மாணவர்களுக்கான அன்பளிப்புக்களை சிறப்பு விருந்தினர்கள், மற்றும் பழைய மாணவர்கள் வழங்கிக் கௌரவித்தனர். (61)

# கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு

(வேலணை)

யாழ்ப்பாணம் கொட்டடி கிராம சேவை அலுவலர் பிரிவுக்கான கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் அலுவலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.யூட் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக நா.தனேந்திரன், உபதலைவராக செ. விக்கினேஸ்வரன், செயலாளராக தெ.நிஷாகரன், உபசெயலாளராக திருமதி கோமளா வசிகரன், பொருளாளராக எஸ். நிஷாந்தன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக கு.புவனேந்திரன், .திருக்கருணை, எம். இராசேந்திரன், த.பிரபாசங்கர், ச.துளசிகன் , க.மகிதரன், லி.அருணன், சோ.சாந்தி கணக்காளராக கு.இந்திரகுமார், காப்பாளராக க.சாம்பசிவம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பலத்த இருமுனைப் போட்டியின் போது இரகசிய வாக்கெடுப்பு இடம்பெற்று புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பேருந்து சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இறுப்பிட்டி வீதியூடான பேருந்து சேவை இன்று காலை 7 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

புங்குடுதீவு சந்தியில் இருந்து இச்சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீவிர முயற்சியின்பயனாக இச்சேவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# நிறைவு விழா


(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் பரி.பேதுரு மெதடிஸ்த ஆலயத்தின் 190 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1823 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட மெதடிஸ்த ஆலயம் சமயப் பணிகளுடன் சமூக முன்னேற்றத்துக்கான தொண்டுகளையும் செய்து வருகிறது.

190 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நன்றி செலுத்தும் ஆராதனை யாழ். சேகரத்தின் முகாமைக்குரு அருட்திரு. ரவிசங்கர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் எஸ். ஜே.கதிரேசபிள்ளை கலந்து கொண்டு சிறப்பித்தார். (10)


# குரங்குகளின் அட்டகாசம் கல்வயல் மக்கள் விசனம்



(சாவகச்சேரி)


மட்டுவில், கல்வயல் பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக குரங்குகளின் தொல்லையால் பல வீட்டுத்தோட்டங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் பயன்தரும் வாழை மரங்கள், முருங்கை மரங்கள் என்பனவற்றை முறிப்பதாகவும், மாங்காய்கள், புளியம்பழம் என்பவற்றையும் இவை விட்டுவைப்பதாக இல்லை எனவும் மக்கள் கவலையடைந்துள்ளனர். தற்போது 25 இற்கும் மேற்பட்ட குரங்குகள் கூட்டமாக இப்பகு திகளில் சுற்றித்திரிவதாகவும், இவற்றை துரத்துவதற்கு சீன வெடி, வாணவெடி, என்பவற்றை பயன்படுத்தினாலும் அவற்றுக்கும் இவை அசைவதாக தெரியவில்லை. ஓட்டால் வேயப்பட்ட பல வீடுகளின் ஓடுகளையும் பாய்ந்து உடைப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அண்மையில் கல்வயல் பகுதியில் ஒரு வீட்டிற்குள் நுழைந்த குரங்கால் வீட்டிலிருந்த பெண்ணொருவர் அலறியடித்து ஓடிய சம்பவம் கூட இடம்பெற்றுள்ளது. வீடுகளில் உள்ள உடைத்த தேங்காய்களை திருடுவதற்காகவே இக்குரங்குக் கூட்டம் வீடுகளுக்குள் நுழைகின்றன. இதனால் நுணாவில், கல்வயல், மட்டுவில், பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (இ)



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வடக்குத் திசையில் புதிதாக கோபுரம் அமைக்கப்பட்டு வருவதனைக் காணலாம். (54)

# தேசிய ஒருமைப்பாடு தொடர்பில் அமைச்சர் வாசுதேவ ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கடந்த வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்து அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து, யாழ்ப்பாணத்தில் இன்று இருக்கும் தேசிய மொழிக் கொள்கை எப்படி உள்ளது? சமூக ஒருமைப்பாடு எவ்வளவு சாத்தியமாகியிருக்கின்றது? என்பது குறித்து கலந்துரையாடினார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செயலக கேட் போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமை வகித்தார்.

மேலும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளர் எஸ். மோகன், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதன், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மற்றும் யாழ்.செயலக ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், தலைமையுரையாற்றிய யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலும் தெரிவிக்கையில், இன்று மிகவும் தேவையுடைய நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒரு தேவையின் நிகழ்வாக இது உள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமாதானத்திற்கு மொழி ஒரு தடையாக இருக்கக் கூடாது. ஒருவரோடு ஒருவராக ஒன்றி வாழ வேண்டும் என்பதற்காக அமைச்சர் பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகின்றார். ஜனாதிபதியும் இந்த அமைச்சருடன் இணைந்து செயற்றிட்டங்களை உருவாக்கிவருகின்றார். அந்தந்தப் பிரதேச மக்கள் சகோதர மொழி கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கேற்ற விதத்தில் யாழ்.செயலகத்தில் 15 வரையான மொழிகளைக் கற்றுக்கொள்ளக்கூடிய அலகு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பொது இடங்களில் மும்மொழிகளில் பெயர்ப்பலகை அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சின் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த அரச அதிபர், ஜனாதிபதியின் செயலணியின் கீழ் மும்மொழித் திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகிறது. இணையத்தளம் மூலமாக ஒவ்வொரு மொழிகளிலும் அந்தந்த மொழிக்குரிய கருத்தினைத் தேடிப் பெற்றுக்கொள்ளும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

நூல்களும் அவ்வாறு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் மொழி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களத்தை மொழி பெயர்ப்பவர்களும் சிங்களப் பிரதேசங்களில் தமிழை மொழி பெயர்ப்பவர்களும் கடமைக்கு அமர்த்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற் றும் சமாதானத்திற்கும், நல் லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் செயலாளர் ஆகி யோர் யாழ். குடாநாட்டில் தேசிய மொழிக் கொள்கை மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பில் இன்றுள்ள நிலைமைகள் குறித்து அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

(பா)

# கலைஞர் கௌரவிப்பு

பருத்தித்துறை பிரதேச கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும் இணைந்து கலாசார அமைச்சின் அரச கலாபூசணம் விருது பெற்ற பருத்தித்துறை கலைஞர் வட்டத்தலைவர் பொன்.மகாதேவாவைப் பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.

இவ்விழா பருத்தித்துறை சிவன்கோவில் கலா மண்டபத்தில் அமரர் கலாபூசணம் இரா.பஞ்சலிங்கம் அரங்கில் பருத்தித்துறைப் பிரதேச மூத்தபிரஜை பேரவைத் தலைவர் சிவாஜி கிருஸ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பகிரங்கசேவை ஆணைக்குழு உறுப்பினர். இரா. தர்மகுலசிங்கம் . பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலர் ரி.ஜெயசீலன், யாழ். மாவட்ட கலாசாரஉத்தியோகத்தர் திருமதி சுகுணாளினி விஜயரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டனர்.

(01)

# புதிய நிர்வாகதெரிவு

(வேலனை)

வேலணை பிரதேசசபையின் அலுவலகத்திற்குட்பட்ட முச்சக்கரவண்டிகளினது உரிமையாளர்கள் ஒன்றிணைந்து சங்க மொன்றினை அமைத்துள்ளனர்.

இச் சங்கத்திற்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் வேலணைப் பிரதேச அமைப்பாளரும் வேலணைப் பிரதேச சபை தவிசாளருமான சி. சிவராசா (போல்) தலைமையில் வேலணை கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற போது சங்கத்தின் உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக இ. செந்தூரன், உபதலைவராக இ. சுபன், செயலாளராக ந. ஜீவானந்ததாஸ், தனாதிகாரியாக கு.ஜெகதீஸ்வரன், உபசெயலாளராக அ.ஜெனா மற்றும் 2பேர் கொண்ட நிர்வாகமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(05)

# ஏகாதசி விரதம்

(குருநகர்)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை ஏகாதசி விரதபூசை நடைபெற உள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து ஸ்ரீமத் நாராயணர் பூமாதேவி, ஸ்ரீதேவி சமேததராய் அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வரபூசையும் இடம் பெறும்.

(68)

# யாழ். அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றார் விநாயகமூர்த்தி எம்.பி.

## கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மகிழ்ச்சி





ஜனாதிபதி தலைமையில் கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் வலி. வடக்கு பிரதேசசபைத் தலைவர் சுகிர்தன் ஆகியோர் முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளார்கள் என அக்கட்சி ஆதரவாளர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இந்த மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்திற்கான அழைப்பிதழ் தமக்கு கிடைக்கவில்லை எனவும், ஆகையால் தாம் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவதில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்தாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தின் அழைப்பிதழ்கள் யாழ். மாவட்ட செயலகத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், கடந்த 12ஆம் திகதி யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, வலி.. வடக்கு பிரதேசததில் மீள்குடியேற்றத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன், இது தொடர்பான அறிக்கை ஒன்றையும் கையளித்தார்.

அத்துடன், வலி. வடக்கு பிரதேசசபைத் தலைவர் சுகிர்தன் வலி. வடக்குப் பகுதிக்கூடாகச் செல்லும் புகையிரதப் பாதையில் பாதுகாப்பு வேலிகளும் அரண்களும் குறுக்கறுத்துக் காணப்படுகின்றன. இதனால் யாழ். தேவி புகையிரத சேவை காங்கேசன்துறைக்கு வருமா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குச் சற்றும் தாமதிக்காமல் எந்தத் தடைகள் வந்தாலும் அவை அனைத்தையும் உடைத்துக்கொண்டு யாழ்தேவி காங்கேசன்துறை வரை பயணிக்கும் என ஜனாதிபதி உறுதியாகப் பதிலளித்தார்.

மேலும், கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழாவிலும் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கலந்து கொண்டிருந்தார். இவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கைலாகு கொடுத்து வரவேற்றதுடன், திறப்புவிழாவில் கலந்துகொண்டமை மகிழச்சியளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனால், அன்றையதினம் மாலை, தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் உதயன் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது, யாழ். அபிவிருத்திக்குழு கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கப்பட்ட முடிவு தனக்கு உரிய முறையில் அறிவிக்கப்படாமையினாலேயே தாம் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும், யாழ் வைத்தியசாலையின் கட்டிடத்திறப்பு விழாவுக்கு தனக்கு பிரத்தியேக அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமன்றி, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கான அழைப்பிதழைப் பயன்படுத்தியே, தான் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும் அவர் தெரிவித்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அருகில் அமைதியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன்,தமிழ்த்தேசிய கூட்மைப்பினால் எடுக்கப்பட்ட முடிவு உரியமுறையில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துறை விநாயகமூர்த்திக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அங்கு தெரிவித்திருந்தார். அத்தோடு, மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்திற்கு அழைப்புகள் கிடைத்ததா என அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து தொலைப்பேசியூடாக தொடர்பு கொண்டு பெப்வரி 11 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் வினவியதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இங்கு குறிப்பிட்டிருந்தார்.

இவர்களுடைய இந்தக் கருத்துக்கள் கூட்டமைப்புக்கு அழைப்புக் கிடைத்திருப்பதை உறுதிப்படுத்துவதாகவும், இருந்தும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பலவற்றை எடுத்துக் கூறுவதற்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் தவறவிட்டமை வருத்தமளிப்பதாகவும் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் சிலர் வருத்தம் வெளியிட்டுள்ளனர். அழைப்பு கிடைக்கவில்லை என்றாலும், கூட்டமைப்பினர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. - லியோ டால்ஸ்டாய்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வளர்ந்தவர்கள் செய்ய வேண்டியது!

வாசிப்புப் பழக்கம் அருகி வருவது இன்று பொதுவாகத் தெரியும் குறைபாடு. அதற்குக் காரணங்களும் உண்டு. தொலைக் காட்சி, வீடியோ கேம்ஸ் இல்லாவிட்டால் பாடப் படிப்பு ரியூஷன் என்று சிறுவர்களின் நேரம் வாசிப்புக்கு ஒதுக்க முடியாததாகவே ஆகிவிட்டது. பெரியவர்களுக்கும் நேரமில்லை. கதை கேட்கும் பழக்கமும் கிட்டத்தட்ட வழக்கொழிந்து வருகிறது.

கதை கேட்பதன் மூலமும் வாசிப்பதன் மூலமும் குழந்தைகள் கற்பனை செய்யப் பழகுகிறார்கள். இதுதான் அவர்களைச் சுயமாகச் சிந்திக்கவும் கற்றுக் கொடுக்கிறது. நம் சிந்தனை உருவாகி வருவதே சிறு வயதில் கேட்ட வாசித்த கதைகளின் வழியாகத்தான் என்பதை இன்று மொழியியலாளர்கள் விளக்குகிறார்கள்.

"மொழிதான் நமக்கு உலகத்தை அளிக்கிறது. உலகத்தைக் கட்டமைக்கும் வழிவகையாக மொழி இருக்கிறது" என்கிறார் நீட்ஷே. மொழியினூடாகவே பண்பாடும் பழக்கங்களும் மொத்த மானுட வரலாற்றின் சேகரமும் நமக்குக் கடத்தப்படுகிறது. கதைகள் இலக்கியங்களைப் புறக்கணிப்பதால் நாம் கலாசாரத்தையே இழக்கிறோம் என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் அறியாமலே கூட நமக்குள் மாற்றங்களை ஏற்படுத்துவதில், நமது ஆளுமை உருவாக்கத்தில் கலை இலக்கியங்களின் பயன்பாடு இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. கலைகள் இல்லாமல், கதைகள் இல்லாமல் மனிதகுலம் இன்றைய நிலைக்கு வளர்ந்திருக்க முடியுமா என்று கேட்டால், இல்லை என்பதுதான் பதில். மனிதமனம் தோன்றியபோதே கதைகளும் தோன்றிவிட்டன.

இலக்கியம் மனித வாழ்வைப் பண்படுத்தியிருக்கிறது; மனிதனை மேம்படுத்தியிருக்கிறது; மனிதனாக வாழச் செய்திருக்கிறது. நிதானமாக யோசித்தால் இதை நாம் ஒவ்வொருவரும் உணர முடியும். பண்பாடு என்பதே நாம் பழகி வந்த கலைகளதும், அழியாத சொற்களதும் தொகுப்புத்தான். மனிதன் தன்னை மேலும் மனிதனாக்கிக் கொள்வதற்கான ஆக்கத்திறன்களை அவை வழங்கியிருக்கின்றன.

அடுத்த மனிதரை எந்த விதத்திலும் இம்சிக்கக் கூடாது. நமக்கிருக்கும் இன்பங்கள், துன்பங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், சலிப்புகள், சங்கடங்கள் எல்லாமே ஒவ்வொரு மனிதருக்குமானவைதான். பூமியில் வாழவும், சுவாசிக்கவும், கடவுளை வணங்கவும், கஷ்டங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் நமக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமையும் நம் சக மனிதனுக்கும் இருக்கிறது என்பதை உணர்த்திக் கொண்டிருப்பவை இலக்கியங்களே. மற்றவர்களுடன் வாழ்வது என்ற கலையையும் இலக்கியங்களே நமக்கு அளிக்க முடியும்.

மானுட வாழ்வு, பிரபஞ்சத் தோற்றம், மனுக்குலத்தின் அல்லாட்டங்கள், பல்வேறு உயிர்களின் வாதை, சிருஷ்டியின் உள்ளீடாக உறைந்திருக்கும் வன்முறை, பேரழிவு... இவை பற்றிய ஆய்வுப் பார்வைகளெல்லாம் இலக்கியங்கள் நமக்குக் கடத்தித் தந்தவையே. அன்பு, கருணை, அறம் எனப் பல்லாயிரமாண்டுக் கால மரபு உருவாக்கிய விழுமியங்களை நாம் மீண்டும் மீண்டும் கண்டடைதல் இலக்கியங்கள் மூலமாகவே சாத்தியமாகிறது.

துயரத்தை, அவமானத்தை, புறக்கணிப்பை, அநீதியை அனைத்தையும் இனிதாக்கிக் கொள்ளும் ஒரு மாயச் செயற்பாட்டைக் கொண்டிருப்பவை அவை. இலக்கியம் ஒரு சக்தி. நமக்குள் அது வந்து சேர, வாழும் வழி பிடிபடும். தன்னலத்தைப் பின்தள்ளி விடுவதும், பிறர் துயர் துடைக்க இந்த வாழ்வைப் பயன்படுத்துவதுமே உயர்வென்று இலக்கியங்கள் வலியுறுத்தும்.

நம் சிறுவர்கள் நல்ல மனிதர்களாக வளர்வதற்கு, பாடப் புத்தகங்களுக்கு வெளியே தேடி வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துவோம். இது வளர்ந்தவர் ஒவ்வொருவரினதும் கடமை.

- ஆசிரியர்

# முஸ்லிம்களுக்கு எதிரான இனவன்முறைக்கு தூபம்

## பின்னணி குறித்து மர்மம்

(குருநாகல்)

குருநாகல் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக்கு தூபம் இடப்படுகிறதா என்ற சந்தேகம் முஸ்லிம் அரசியல்தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. குருநாகல் மாவட்டத்திலுள்ள நாரம்மல பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு கடந்தவாரம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாரம்மல பிரதேசத்தைச் சேர்ந்த ஐம்பது முஸ்லிம் வர்த்தகர்களுக்கு இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக கடைகளை மூட வேண்டுமெனவும் அவ்வாறு செய்யத் தவறினால் கொலை செய்ய நேரிடும் எனவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மிரட்டல்கள் தொடர்பில் குருநாகல் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அப்துல் சாதர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது வன்முறைக்கான தூபமிடும் செயல் எனவும், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சதார் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அச்சுறுத்தல்கள் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிற்கு அறிவித்துள்ளதாக அமைச்சர் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறினால் மீண்டும் 1983ஆம் ஆண்டைப் போன்று வன்முறைகள் வெடிக்கக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அச்சுறுத்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# நேர்மையான அரசியல்வாதிகளை இந்த நாடு இழந்து விட்டது

## – முன்னாள் ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் நலனில் அக்கறை செலுத்தும் அரசியல்வாதிகள் எவரும் இப்போது இல்லை மக்களின் நலனுக்காக உழைக்கும் அரசியல்வாதிகளை இந்த நாடு இழந்து விட்டது. இப்போது உள்ள அரசியல்வாதிகள் அனைவரும் மக்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்படுபவர்களாகவே உள்ளனர். என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேர்மையான அரசியல்வாதிகள் தற்போதைய சமூகத்தில் தேடிக் கண்டு பிடிக்க முடியாது. நேர்மையான, தைரியமான அரசியல் வாதிகள் எவரும் தற்போது கிடையாது.

விஜய குமாரணதுங்க போன்ற அரசியல்வாதிகள் நேர்மையாக நாட்டுக்காக உழைத்தார்கள்.

இவ்வாறு மக்களுக்காக உழைக்க வேண்டுமென்ற எண்ணமுடைய அரசியல்வாதிகளைக் காண்பது அரிதாகிவிட்டது. தற்போது சுயலாப நோக்கங்களுக்காகவே பலர் இன்று அரசியலில் ஈடுபடுகின்றனர் எனவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸாரின் கடமையில் தலையீடு; அரசியல்வாதிகள்மீது சாடல்

(கொழும்பு)

பிராந்திய ரீதியாக செயற்பட்டு வரும் அரசியல்வாதிகள் பொலிஸ் திணைக்களம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு குந்தகமாக செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

பிரதேச வாரியாக செயல்படும் அரசியல்வாதிகளின் தலையீட்டினால் உரிய முறையில் தாம் கடமைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கவலை வெளியிட்டுள்ளனர்.

மணல் அகழ்வு, மரம் வெட்டுதல், கஞ்சா செய்கை, இரத்தினக்கல் அகழ்வு, சூதாட்டங்களை நடாத்துதல், சட்டவிரோத மதுபான விற்பனை, போதைப் பொருள் வர்த்தகம் என பல்வேறு குற்றச் செயல்களுடன் பிரதேச அரசியல்வாதிகளுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, இரத்தினபுரி, அநுராதபுரம், புத்தளம், மொனராகலை உள்ளிட்ட பல பிரதேசங்களில் இவ்வாறு அரசியல்வாதிகள் பொலிஸாரின் கடமைகளில் தலையீடு செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேர்மையான முறையில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதற்கு சில அரசியல்வாதிகள் முயற்சித்தும் வருகின்றனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# கொழும்புக்குச் சென்றால் எச்சரிக்கையாக இருங்கள்

## பிரித்தானியா எச்சரிக்கை

(லண்டன்)

சுற்றுலாப்பயணங்களை மேற்கொண்டு இலங்கைக்குச் செல்லும் பிரித்தானியர்களை எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு அந்த நாட்டு அரசு கோரிக்கை விடுத்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து கொழும்புக்கு வரும் பெண் சுற்றுலாப் பயணிகள், தாம் வீதிகளில் செல்லும் போது தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுவதாக முறையிட்டு வருகின்றனர்.

இந்த முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

கொழும்பு - கறுவாக்காடு பகுதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வந்த கலிபோர்னியாவின் பெண் ஒருவர், தாம் காலையில் நடைப் பயிற்சிகளை மேற்கொள்ளும் போது தொந்தரவுக்கு உள்ளானதாக பொலிஸில் முறையிட்டுள்ளார்.

தம்மை சிலர் கையடக்க தொலைபேசியில் படம் எடுப்பதாகவும் பிரச்சினைகளை ஏற்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நோர்வேயில் இருந்து இலங்கைக்கு வந்துள்ள பெண் ஒருவரும் நீர்கொழும்புப் பகுதியில் தொந்தரவுகளுக்கு உள்ளானதாக முறையிட்டுள்ளார்.

பிரான்ஸில் இருந்து வந்திருந்த ஒருவர் தாம் பாலியல் ரீதியான தொந்தரவுகளுக்கு உள்ளானதாக குறிப்பிட்டுள்ளார்.


இதற்கிடையில் சிகிரியா மலைக்குச் செல்லும் போது அங்கு சிலர் தம்மிடம் சுமார் 3000 ரூபா வரையான பணத்தை அறிவிடுவதாக வெளிநாட்டு பெண்கள் முறையிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, பிரித்தானிய சுற்றுலா பயணிகள், இலங்கைக்குச் செல்லும் போது அவதானமாக நடந்துகொள்ளுமாறு அந்த நாடு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையில் மே மாதம் 2009ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப் பட்ட பின்னர் புலம் பெயர் நாடுகளில் எஞ்சியிருக்கும் அதன் கட்டமைப்பின் இன்றைய சமகாலப்பார்வை.**




குலம்



தனம்



ரகுபதி



# பங்கு பிரிப்புக்களும் படுகொலையும் 08

சாத்திரி

**அனைத்துலகச் செயலகத்தின் அடுத்த திட்டம்தான் மீள இணையும் புலிகள் என்கிற ஒரு காணொளி. இந்தக் காணொளியானது இறுதிக் கட்ட யுத்தத்தில் நாட்டை விட்டு வெளியேறி அவுஸ்ரேலியா போவதற்காக இந்தோனேசியாவில் தங்கி நிற்கும் புலிகள் அமைப்பை சேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்டிருந்தது. இவர்களிற்கு அனைத்துலகச் செயலகமே பணஉதவி செய்து அப்பபடியொரு காணொளியினை தயாரித்து அனுப்புமாறு கோரியிருந்தனர். காணொளியினை பார்ப்பவர்களிற்கு அதனை தயாரித்ததன் நோக்கம் புரியும். வேறென்ன, நிதி சேகரிப்புத்தான்.**

ஊடக அறிக்கை ஒண்டும் வேண்டாம், மற்றைய நாட்டு பொறுப்பாளர்களும் இரும்பொறையும் அதற்கு ஒத்து வருகிறார்கள் இல்லை, நாங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் இணைந்து செயற்படுவோம் என்று பரிதி சொல்லிவிட்டதை அடுத்து,

குமார் உட்பட மேலும் பலர் பரிதியை தொடர்பு கொண்டு கூட்டறிக்கை விடவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார்கள். காரணம் கூட்டறிக்கை ஒன்று வந்தால்தான் பிரான்சை முன்னுதாரணமாக எடுத்து மற்றைய நாடுகளிலும் இணைப்புக்களை ஏற்படுத்தலாம். அல்லது மற்றைய நாடுகளில் தொடர்ந்தும் மாறி மாறி துரோகி பட்டங்கள் வழங்குவது தொடரும். அடுத்ததாக எம்மவர்களிற்குள் உள்ள சிறிய பிளவுகளை வைத்துக்கொண்டு எதிரியானவன் அதற்குள் புகுந்து பிளவுகளை வலுப்படுத்தி மோதல்களை ஊக்குவித்து எம்மைக்கொண்டே எம்மை அழிக்கும் வேலையை செய்து முடிப்பான். எனவே இந்த கூட்டறிக்கையானது நிச்சயம் எதிரிக்கு ஏமாற்றத்தை கொடுக்கும்.

எனவே கூட்டறிக்கை அவசியம் என்று வலியுறுத்தியதோடு, மீண்டும் நவம்பர் மாதம் 11ஆம்திகதி சந்திப்பு ஒன்றை நடத்துவதோடு அறிக்கையும் வெளியிடுவதென உறுதியாக சொல்லி விட்டார்கள்,

அதற்கிடையில் பிரான்ஸில்,தான் மற்றைய அமைப்புக்களோடு இணைந்து இயங்கப்போவதாக மற்றைய நாட்டுஅனைத்துலகப் பொறுப்பாளர்களிற்கும் அறிவித்து விடுகிறார். உடனடியாகவே இலண்டன் பொறுப்பாளர் தனத்திடம் இருந்தும், சுவிஸ் பொறுப்பாளர் ரகுபதியிடம் இருந்தும் எதிர்ப்பு கிளம்புகின்றது. அதுமட்டுமல்ல, அவர்கள் உடனடியாக இரும்பொறை (அரவிந்தன் - இவர்தான் நெடியவன் மற்றும் வாகீசன் ஆகியோர் கைதான பின்னர் அனைத்துலகத்தை வழிநடத்தும் முக்கியமானவர்) என்பவரை தொடர்பு கொண்டு பிரான்ஸில் பரிதியின் இணைவை எப்படியாவது தடுத்து நிறுத்தும்படியும் அப்படி அங்கு இணைந்தால் அதே முன்னுதாரணமாகி அனைத்து நாடுகளிலும் அனைவரோடும் இணையவேண்டி வரும். பின்னர் கணக்கு வழக்கு எல்லாம் காட்ட வேண்டி வரும், இணைப்பை நிறுத்தி விடுமாறு கூறிவிடுகிறார்கள். பரிதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இணையவேண்டாம் அறிக்கையும் விடவேண்டாம் என கோரிக்கை வைக்கிறார். ஆனால்,தான் இக்கட்டான நிலையில் இருப்பதாக பரிதி தெரிவிக்கிறார், இணைப்பை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்கிற நோக்கோடு ஜேர்மனியில் இருந்த இரும்பொறை பாரிஸிற்கு விரைகிறார். அன்று இரவு பரிதி சுட்டுக்கொல்லப் படுகின்றார்.

அதாவது, பரிதிக்கும் தலைமைச் செயலக தமிழரசனிற்கும் நடந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் தலைமைச் செயலகத்தினருடனான இணைவிற்கு பரிதி ஒத்துக்கொண்டு அறிக்கை வெளியிடுவதற்கு முன்னராக அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக லண்டன் தனத்திடம் இருந்தும் சுவிஸ் ரகுபதியினாலும் கொடுக்கப்பட்ட அழுத்தத்தை தொடர்ந்து, ஜேர்மனியில் இருந்த இரும்பொறை பிரான்ஸிற்கு விரைந்து வந்ததும் பரிதி சுட்டுக் கொல்லப்படுகிறார். பரிதி சுட்டுக் கொல்லப்பட்ட சில நிமிடங்களிலேயே அனைத்துலக செயலகம் சார்ந்த இணையத் தளங்கள் இந்தக் கொலையை தலைமைச் செயலகத்தை சேர்ந்தவர்களே செய்ததாக ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் கடும் முயற்சியில் இறங்கியிருந்தார்கள். அதற்காக அவர்கள் அவிழ்த்த பொய் செய்திகள்தான் பாரிஸில் வினாயகம் சுற்றிவளைத்து கைது, தமிழரசன் கைது, கனி என்பவர் கைது என்கிற பரபரப்பு செய்திகள். இவை எல்லாவற்றையும் விட அதிர்வு என்கிற அனைத்துலகத்தின் அம்மம்மா குழல் (ஊதுகுழல்) இணையம் வெளியிட்ட செய்தியை பார்த்து விழுந்து விழுந்து சிரிப்பதா அல்லது கேவி கேவிக் அழுவதா என்றே தெரியாதிருந்தது.

காரணம் அவர்களது செய்தியில் வினாயகம் சுற்றிவளைத்துக் கைது என்பதோடு செய்தியை உறுதிசெய்வதானால் பிரெஞ்ச் புலனாய்வுத் துறையோடு தொடர்பு கொள்ளவும் என்று 077 என்று தொடங்கும் ஒரு இலக்கத்தையும் எழுதியிருந்தார்கள். அதை படிப்பவர்கள் பாவம் பிரெஞ்சு புலனாய்வுத் துறை, அவர்களிற்கு சாதாரண தொலைபேசி இணைப்பே இல்லை, கைத்தொலைபேசி தான் பாவிக்கிறாங்கள் என்று நினைத்து விட்டு அந்த இலக்கத்திற்கு போனடித்திருந்தால் இந்த இணைப்பு பாவனையில் இல்லையென்று சொல்லியிருக்கும். அட பாவமே, பிரெஞ்ச் புலனாய்வு துறையிடம் பணம் இல்லாததால் தொலைபேசிக் கட்டணத்தை கட்டவில்லையென்று நினைத்திருப்பார்கள்.

அவர்களின் இந்த திட்டமும் பிசுபிசுத்துப் போக, அனைத்துலகச் செயலகத்தின் அடுத்த திட்டம்தான் மீள இணையும் புலிகள் என்கிற ஒரு காணொளி. இந்தக் காணொளியானது இறுதிக் கட்ட யுத்தத்தில் நாட்டை விட்டு வெளியேறி அவுஸ்ரேலியா போவதற்காக இந்தோனேசியாவில் தங்கி நிற்கும் புலிகள் அமைப்பை சேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்டிருந்தது. இவர்களிற்கு அனைத்துலகச் செயலகமே பணஉதவி செய்து அப்படியொரு காணொளியினை தயாரித்து அனுப்புமாறு கோரியிருந்தது. காணொளியினை பார்ப்பவர்களிற்கு அதனை தயாரித்ததன் நோக்கம் புரியும். வேறென்ன, நிதி சேகரிப்புத்தான்.

ஆனால், பரிதியின் கொலையை பிரெஞ்ச் காவல்துறையினர் ஆரம்பத்தில் மூன்று கோணங்களில் விசாரிக்க ஆரம்பித்திருந்தனர். அவை. 1) இலங்கை புலனாய்வுத் துறை. 2) உள்வீட்டு மோதல்கள் அதில் தலைமைச் செயலகம் - அனைத்துலகத்திற்கிடையேயான குழு மோதல். விசாரணைகளின் ஆரம்பத்திலேயே கொலை சம்பந்தமாக பரிதியுடன் நெருக்கமாக இருந்த பாம்புக் குழுவை சேர்ந்த இருவர் கைதானதும் தலைமைச் செயலகத்திற்கும் கொலைக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று உறுதியாகிவிட்ட நிலையில்தான், அடுத்ததாக இலங்கை புலனாய்வு பிரிவா அல்லது அனைத்துலகத்தின் உள்வீட்டு மோதலா? என்கிற கோணத்தில் விசாரணைகள் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுதுதான் பிரான்ஸின் முன்னணி பத்திரிகைகளில் ஒன்றான Le Parisien பத்திரிகையில் இலங்கையரசே பரிதியின் கொலைக்கு பின்னால் இருப்பதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால் இது போன்ற அரசியல் கொலை பற்றிய செய்திகளில் தகவல் அடிப்படையாக ஒரு விசாரணை அதிகாரியை மேற்கோள் காட்டியோ அல்லது உள்துறை அமைச்சர் அல்லது அதன் குரல் தரவல்ல அதிகாரிகளை மேற்காட்டியே செய்தி வெளியாவது வழமை. அதன் அண்மைய உதாரணம் பாரிஸில் படுகொலை செய்யப்பட்ட மூன்று குர்திஸ்தான் போராளிகள் பற்றிய செய்திகளை பிரெஞ்ச் பத்திரிகைகள் வெளியிட்ட விதத்தினை படித்திருந்தவர்களிற்கு புரிந்திருக்கும். ஆனால் பரிதி பற்றி Le Parisien பத்திரிகையில் ஒரு மொட்டை செய்தியாகவே வெளிவந்திருந்தது. அதையெல்லாம் விட்டுவிடலாம். இந்தக் கொலையை இலங்கை அரசே செய்தது என வைத்துக் கொள்வோம். அரசியல் கொலைகளை கன கச்சிதமாக உளவுப் பிரிவுகள் மூலம் மேற்குலக நாடுகளும், ரஷ்யாவும், இஸ்ரேலுமே இதுவரை செய்து முடித்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் தங்கள் அனைத்து வளங்களையும் பாவித்திருப்பதோடு கொலை நடந்து பல வருடங்களின் பின்னர் அதனோடு சம்பந்தப்பட்டதொருவர் ஓய்வு பெற்ற காலத்தில் ஒரு புத்தகத்தை எழுதினாலோ அல்லது ஏதாவது ஒரு பத்திரிகையாளர் பல வருடங்களாக நோண்டி விடயத்தை வெளியே கொண்டு வந்தால்தான் வெளிவரும். ஆனால் அந்த உண்மைகள் வெளிவரும் போது அந்த விடயமே மறந்து போய்விட்டிருப்பதோடு, அதை வைத்து எந்த நியாயமும் கிடைத்ததும் இல்லை. இலங்கை போன்ற சிறிய நாடுகள் மேற்குலக நாடுகளிற்குள் புகுந்து அரசியல் கொலைகளைச் செய்வதற்கு துணியமாட்டாது. காரணம் கொலையை இலங்கையரசுதான் செய்ததென்று நேரடியாக உறுதிப் படுத்தப்பட்டால் பிரான்ஸ் போன்ற பலமான நாடுகளிற்கு தங்கள் நாட்டின் பாதுகாப்பு கௌரவ பிரச்சினையாகி அது இலங்கை மீதான அழுத்தத்தைக் கொடுக்கும் என்று தெரியாத அளவிற்கு இலங்கையரசு முட்டாள் அல்ல.

(தொடரும்)



# போர்க் குற்ற கண்காணிப்புக்குழு இலங்கையில் நிலை கொள்ளும் வாய்ப்பு

## தெற்கு அரசியல்வானில் பரபரப்பு

(கொழும்பு)

போர்க் குற்றம் குறித்து ஆராயும் ஐ.நா. நிபுணர்குழு இலங்கையில் நிலைகொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. அமெரிக்காவின் இந்த யோசனை ஏற்றுகொள்ளப்படும் சாத்தியம் அதிகம் உள்ளது. ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் மேற்படி யோசனையால் இலங்கை அரசியலில் பாரிய முரண்நிலை தோன்றும் சாத்தியம் உருவாகியுள்ளது.

அமெரிக்காவின் அந்த யோசனையின்படி ஐக்கிய நாடுகளின் போர்க்குற்றம் தொடர்பான விசேட நிபுணர்களுக்கு இலங்கையில் சுதந்திரமான நடமாட்டத்துக்கு கோரிக்கை விடுக்கப்படவுள்ளது. பேச்சுச் சுதந்திரம், ஒன்றுக்கூடும் சுதந்திரம், சித்திரவதைகள் மற்றும் காணாமற் போதல் போன்ற விடயங்கள் தொடர்பில் இந்த நிபுணர்களின் செயற்பாடு அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு பக்கங்களை கொண்ட இந்த யோசனையின்படி இலங்கைக்கு யோசனையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒரு வருட அவகாசம் வழங்கப்படவுள்ளது. அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையும் இந்த யோசனையில் தீவிரமாக வலியுறுத்தப்படவுள்ளது.

# ஜெனிவா கூட்டத் தொடரில் மகிந்த சமரசிங்க பங்குகொள்வாரா?

## இறுதி முடிவு இன்னும் இல்லை

(கொழும்பு)

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் 22ஆவது அமர்வு ஆரம்பமாக இன்னும் ஒருவாரமே உள்ள நிலையில், இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் குழுவைத் தெரிவு செய்யயும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 22ஆவது கூட்டத் தொடரில், அரசு கடும் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா மற்றொரு தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கேற்கும் இலங்கைக் குழு கடுமையான நெருக்கடிகளை சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், அமைச்சர்களை ஜெனிவாவுக்கு அனுப்புவது அரசு மீது நேரடியாக அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதால், அமைச்சர்களை அனுப்புவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்று தெரிகிறது. வழக்கமாக, அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவே அரசின் சார்பில் ஐ.நா கூட்டங்களில் பதிலளித்து வந்துள்ளது. ஆனால் இம்முறை மகிந்த சமரசிங்கவோ அல்லது வேறு அமைச்சர்களோ ஜெனிவா செல்ல வாய்ப்பில்லை என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

பெரும்பாலும் ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவே ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் இந்தக் கூட்டத் தொடருக்குத் தலைமை வகிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் ஜெனிவாவில் ஏற்படும் நெருக்கடிகளை அதிகாரிகளின் தலையில் போட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று அரசின் மூத்த அமைச்சர்கள் கருதுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஜெனிவா கூட்டத்தொடருக்கான குழு இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், பெரும்பாலும் இந்தவாரம் அதுபற்றி முடிவு செய்யப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மனநோய் பாதிப்பு இலங்கையில் அதிகம்

(கொழும்பு)

உலக சனத்தொகையில் நான்கு பேரில் ஒருவர் மன நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக தேசிய மன சுகாதார கவுன்சிலின் பணிப்பாளரும், மனோதத்துவ நிபுணருமான டாக்டர் நிரோஷ மென்டிஸ் தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த காலங்களைவிட மனநோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அழுத்தம் காரணமாக மாணவர்கள் உட்பட பலர் மன நோயினால் பாதிக்கப்படுவதாகவும் டாக்டர் நிரோஷ மென்டிஸ் தெரிவித்தார்.

பரீட்சை அண்மிக்கும் காலப்பகுதியில் கொழும்பில் பிரதான பாடசாலைகள் அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் மனோரீதியாகப் பாதிக்கப்படும் மாணவர்கள் அனுமதிக்கப்படும் விகிதம் அதிகரித்துள்ளது.

இறுக்கமான மனோநிலையே இதற்கான காரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மனசுகாதார, மன சுகாதாரம் குறித்த பாடநெறிகளைத் தொடர்ந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

# ஐ.சி.ஆர்.சி. உதவும்

இலங்கையில் மனிதாபிமானப் பணிகளுக்கு தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்படும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கென பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக ஐ.சி.ஆர்.சி. குறிப்பிட்டுள்ளது.யுத்த முடிவின் பின்னர் மனிதாபிமான தேவைகளை கண்டறிந்து அத்தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதே தமது பிரதான நோக்கம் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. சர்வதேச சங்கத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அச்சங்கம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. உலகம் முழுவதும் 90 நாடுகளில் இயங்கி வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 13,000 பணியாளர்களை, சேவையில் ஈடுபடுத்தியுள்ளது. 1980ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கம் தனது பணிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யுத்தக் குற்றச் செயல் குறித்து விசாரணை

# ஐ.நா.வின் கோரிக்கையை வரவேற்கிறது மன்னிப்புச்சபை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கோரிக்கையை வரவேற்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

நம்பகரமானதும், பக்கச்சார்பற்றதுமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அண்மைய அறிக்கையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் இன்னமும் பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பது தெளிவாகியுள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் நல்லிணக்கம் · மற்றும் யுத்த வலய மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தின் முனைப்புக்கள் போதுமானதல்ல என குறிப்பிட்டுள்ளது. பாரியளவு மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் எந்த வகையிலும் போதுமானதல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றச் செயல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துதல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு வழங்கிய தொழில்நுட்ப உதவிகளையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

# மாத்தளை மனிதப் புதை குழி எலும்புக்கூடுகள் கூறும் இரகசியம்



(மாத்தளை)

மாத்தளை வைத்தியசலை வளாகத்தில் அண்மையில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் பல்வேறு காலகட்டங்களுக்கு உரியவை என்று ஆரம்பகட்ட பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவ இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த மனித எச்சங்களை மேலதிக பரிசோதனைகளுக்காக இராசாயன பகுப்பாய்வு நிலையத்துக்கு அனுப்பப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதற்கான பரிசோதனைகளுக்காக, குறித்த மனித எச்சங்கள் மீட்கப்பட்ட மண்ணின் மாதிரியும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


கடந்த வருடம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி முதல், கடந்த 12ஆம் திகதி வரையில் இந்த பகுதியில் இருந்து 154 பேரின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதில் 141 எச்சங்கள் தலையற்ற நிலையில் வெறும் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



யூ.ஆர்.பிறண்ட் பௌண்டேசன் நிறுவனத்தால் நடாத்தப்படும் தையல் பயிற்சியை நிறைவு செய்த யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்ட யுவதிகளையும், நிறுவனத் தலைவர் க.செவ்வேள் யுவதி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் காணலாம்.

# நடைமுறைகளைப் பின்பற்றினால் நெற்செய்கை அழிவை தடுக்கலாம்



(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையின்போது எடுக்கப்படும் தீர்மானங்களை விவசாயிகள் சரியாக பின்பற்றுவதனூடாகவே பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் நேற்றமுன் தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக பயிரச்செய்கை தொடரபான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தொடரும் பெருமழைகாரணமாக கிளிநொச்சி மாவட்ட நெற்செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். மாவட்டத்தில் பயிரிடப்பட்ட ஏக்கர்களில் சுமார் 70 விகிதங்களுக்கும் அதிகமான பகுதி இன்றுவரை அழிவுகளுக்குள்ளாகியுள்ளன.

அழிவுகளை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இருப்பினும், விவசாயிகள் தொடர்ச்சியாக இவ்வாறான தாக்கங்களை எதிர்கொண்டுவருவதால், விவசாயக் காப்புறுதிகளை முறையாக மேற்கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. அதன் மூலம் இவ்வாறான அழிவுகளை எதிர்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் முழுமையான நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வருடமும் அழிவுகள் ஏற்படுவதை தடுக்கும் நோக்குடனும் இக்கலந்துரையாடலின் மூலம் எட்டப்படும் தீர்மானங்களையும் விவசாயிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். அதனை மீறி செயற்படுமிடத்து அதன் மூலம் ஏற்படும் விளைவுகளுக்கு ஒட்டு மொத்த நெற்செய்கையாளர்களும் பாதிப்பினை எதிர்கொள்ளநேரிடும். அத்தோடு தீர்மானிக்கப்பட்ட நிலப்பரப்புகளில் மட்டுமே விதைப்புக்களை மேற்கொள்வதும் ஏனைய தீர்மானங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

அத்தோடு விவசாயிகளின் கோரிக்கைக்கமைவாக வரிவிலக்கின் அடிப்படையில் அறுவடை இயந்திரங்களை பெற்றுக் கொடுக்கவும் நடவ்டிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்

இதேவேளை இங்கு கருத்து தெரிவித்த நீர்ப்பாசனத் திணைக்கள மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சுதாகரன். இவ் வருடம் இரணைமடுக்குளம் 1500 மில்லியன் ரூபாவிற்கும் மேற் பட்ட நிதி ஒடுக்கீட்டின் மூலம் பாரிய அபிவிருத்திப் பணிக்கு உட்படுத்தப்படுகின்ற சமகாலத்தில் சிறுபோக நெற்செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே, குளத்தின் இடது கரை வாய்கால் பெரும்பகுதி புனரமைக்கப் படவுள்ளதால் ஏ9 வீதிக்கு மேற்காக உள்ள காணிகளில் பயிர்செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகள் வலதுகரை வாய்காலினூடாக நீர்ப்பாசனத்தைப் பெறும் காணிகளில் செய்கையினை மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவித்தார்.

## சத்தியப்பிரமாணம்



(அச்சுவேலி)

நாவற்காடு-அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சோர்ந்த பரந்தாமன் கஜேந்திரன் அவர்கள் நீதி அமைச்சின் நியமனத்திற்கமைய அண்மையில் யாழ்.மாவட்ட நீதி மன்ற நீதிபதி பி.சிவகுமார் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் இலங்கை சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினரும், ஊடகவியலாளருமாவார். (03)

# யோகாசனப் பயிற்சி

காரைநகர் - களபூமி ஆலடியில் பல்வேறு ஆன்மீக மனிதநேய நோக்கங்களுடன் கொழும்பு - வெள்ளவத்தையில் இயங்கிவரும் ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யத்தின் கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு பன்னிரு திருமுறை முற்றோதல், யோகாசனப் பயிற்சிகள், தியானம் என்பன நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த சனிக்கிழமை யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது. யோகாசனம், மூச்சிப்பயிற்சி, தியானம், முற்றோதல் போன்ற பயிற்சிகளில் ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கடந்த சனி, ஞாயிறு தினங்களில் வியாவில் - ஐயனார் தேவஸ்தானத்திலும் மேற்படி நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். (10)

# முரசின் இன்றைய பலன்

(18.02.2013 - திங்கட்கிழமை)

**நந்தன வருஷம் மாசி 06 ஆம் திகதி. நட்சத்திரம் கார்த்திகை. மரணம் பிற்பகல் 01.14 வரை. திதி அட்டமி பிற்பகல் 05.02 வரை. இராகுகாலம் 08.02 - 09.32 வரை. சுபநேரம் 12.32 - 02.02 வரை.**

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உயர்ந்த எண்ணங்கள். சூழ்நிலை அனுகூலம். தொழில் சிறக்கும். லாபம் உயரும். குடும்பத் தேவை பூர்த்தி. தந்தை வழியில் உதவி. மாணவர் கல்வியில் உயர்வு. |
| ரிஷபம் | கவனக்குறைவால் இழப்பு. தொழில் போட்டி. செலவுகள் வரும். குடும்ப நண்பர் உதவுவார். பொருள் பாதுகாப்பில் கவனம். உறவினர் வருகை. நல்ல செய்தி தாமதம். |
| மிதுனம் | நற்செயல்கள் புரிவீர்கள். அனுபவசாலியின் உதவி. தொழில், சராசரி. வரவுக்கு ஏற்ப செலவுகள். நண்பர்களால் நன்மை. சுற்றத்தில் பாராட்டு. எல்லோருடனும் இன்முகம். |
| கடகம் | பாராட்டுகள் வரும். திட்டமிட்ட காரியம் நிறைவேறும். நட்பில் மகிழ்ச்சி. கூடுதல் உழைப்பு. கூடுதல் வருமானம். குடும்பத்தேவைகள் பூர்த்தி. உறவினர் சுப நிகழ்வு. பெருமிதம். |
| சிம்மம் | எடுத்த காரியம் முடியும். வெற்றி. மிதமான பணவரவு. நண்பர்கள் மத்தியில் வரவேற்பு. உடல்நலத்தில் கவனம் வேண்டும். வீட்டுப் பொருட்கள் சேரும். குடும்பத்தில் குதூகலம். |
| கன்னி | சுயநலம் கருதாமல் செயல்படுவீர்கள். பணிகளில் நேர்த்தி. தொழிலுக்கு தேவையான வசதி. தாராள பணவரவு. மனதில் நம்பிக்கை. புத்திரரால் பெருமை. உறவுகள் உதவி. |
| துலாம் | அறிமுகம் இல்லாதவரிடம் விலகுங்கள். தற்காப்பு அவசியம். தொழில் மந்தம். தேவையை விட குறைந்த பணவரவு. வாகனப் பயம். உதவிகள் மூலம் சிரமம் தவிர்ப்பீர்கள். |
| விருச்சிகம் | தொழிலில் போட்டியாளர் குறுக்கிடுவர். வென்று வேலைகள் முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களால் நன்மை. பணவரவு மந்தம். பயணத்தில் மாறுதல். பய உணர்வு தொந்தரவு. |
| தனுசு | தடுமாற்றமும், மறதியும் இருக்கும். தொடர்ந்த உழைப்பு. தொழிலில் வளர்ச்சி. புதிய இனங்களில் செலவு. சிலரது ஆலோசனையால் சிரமம். போக்குவரத்து கவனம். ஓய்வு தேவை. |
| மகரம் | கலைஉணர்வு அதிகரிக்கும். இயற்கை ரசிப்பு. புதியவர்களின் உதவி. சான்றோரின் ஆசி. சராசரி பணவரவு. சுபகாரியச் செலவு. விருந்து வரும். பணிவால் எதையும் வெல்வீர்கள். |
| கும்பம் | நிதானமுடன் யோசித்து செயல். நண்பர் அதிருப்தி. தொழில் சிறக்க கூடுதல் உழைப்பு. உடல் நலக்குறைவு. ஆடம்பரச்செலவை குறைப்பது நன்மை. கடன் வேண்டாம். அசதி. |
| மீனம் | எண்ணம், செயலில் சிறுமுரண்பாடு. வெறுப்பை பிறரிடம் வெளிப்படுத்த வேண்டாம். கூடுதல் உழைப்பு தேவை. அளவான பணவரவு. வெளியூர் பயணம். உடல் நலத்தில் கவனம். |

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் யாழ்.மறை மாவட்டத்துடன் இணைந்து நடத்தும் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவின் தொடக்க விழா நிகழ்வுகள் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பிரதான வீதி பத்திரிசியார் வீதிச் சந்தியில் இருந்து கலை பண்பாட்டு பேரணியுடன் ஆரம்பித்து யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நூற்றாண்டு விழாக்குழுத் தலைவரும் யாழ்.பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதியுமாகிய பேராசிரியர் தி.வேல்நம்பியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் புனித பத்திரிசியர் கல்லூரி அதிபர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் வரவேற்புரை வழங்குவார்.

"நன்றாகத் தமிழ் செய்வோம்" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் இவ் விழாவின் தொடக்கத்திற்கான பிரகடனத்தை யாழ்.ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கொண்டு ஆசி வழங்குவார். தொடர்ந்து நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

நூற்றாண்டு விழாவின் இலக்கு குறித்த விளக்கவுரையை நூற்றாண்டு விழாக் குழுவின் இணைச்செயலர் அருட்கலாநிதி ஆர்.பி.ஜெயசேகரம் வழங்குவார். விழாவின் தொடக்கப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனும், 'நன்றாகத் தமிழ்செய்வோம்' என்ற பொருளில் சிறப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் வழங்குவர். கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனத்தைத் தொடர்ந்து, தனிமனித விருத்தியில் அதிக பங்களிப்புச் செய்வது தாய்மொழிக்கல்வியா? பிற மொழிக் கல்வியா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெறும். (10)



# வில்லியம்ஸன், மக்கலம் அதிரடி வென்றது நியூசிலாந்து



(ஹமில்டன்)

வில்லியம்ஸன், மக்கலம் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி நேற்று நியூசிலாந்தின் ஹமில்டனில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இங்கிலாந்து அணி, இரண்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் விக்கெட்டை இழந்து தடுமாறியது. இந்நிலையில் இயன் பெல்லுடன் இணைந்த ட்ரொட் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ட்ரொட் 68, இயன் பெல் 64, ரூத் 56, பட்லர் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிராங்கிளின் மூன்று, மக்லெங்ஹன் நான்கு, மில்ஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 259 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, கப்டன் மக்கலம், வில்லியம்ஸன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் நியூசிலாந்து அணி 48.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கப்டன் மக்கலம் ஆட்டமிழக்காது 69, வில்லியம்ஸன் 74, டெய்லர் 22, குப்ரில் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வோஹோஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இறுதியில் செரீனா, அஸரங்கா


(டோகா)

கட்டார் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னணி வீரர்களான செரீனா வில்லியம்ஸ் மற்றும் அஸரங்கா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கட்டார் ஓப்பன் சர்வதேச போட்டி டோகாவில் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்க்கொண்டார். இந்தப் போட்டியில், செரீனா 6-3, 6-2 என்ற நேர் செட்கணக்கில் ஷரபோவாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் பெல்லாரஸ் நாட்டின் விக்டோரியா அஸரங்கா, போலந்து நாட்டின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்காவை எதிர்க்கொண்டார். இந்தப் போட்டியில், ரத்வன்ஸ்காவை 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி அஸரங்கா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

## மெஸ்சியின் 300



(மர்ட்ரிட்)

பார்சிலோனா அணிக்காக 300 கோல்களை அடித்து நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்சி முத்திரை பதித்துள்ளார்.

உலகின் முன்னணி கால்பந்து வீரர் மெஸ்சி. ஆர்ஜென்ரீனா நாட்டைச்சேர்ந்த இவர் ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். ஸ்பெயின் லீக் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பார்சிலோனா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. இந்த 2 கோல்களையும் மெஸ்சி அடித்தார்.

இதன் மூலம் அவர் பார்சிலோனா அணிக்காக 300 கோல்களை அடித்து முத்திரை பதித்துள்ளார். மெஸ்சி 2004ஆம் ஆண்டில் இருந்து பார்சிலோனா அணிக்காக ஆடி வருகிறார். இதுவரை 365 ஆட்டத்தில் விளையாடி 301 கோல்கள் அடித்துள்ளார்.

2012-2013 சீசனில் இதுவரை அவர் 48 கோல்கள் அடித்துள்ளார். உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை 4 முறை வென்று மெஸ்சி சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உழைப்பின் பலன்



(டோகா)

கடின உழைப்பிற்குக் கிடைத்த சிறந்த பரிசாகவே தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம்பிடித்ததை உணர்கின்றேன் என செரீனா வில்லியம்ஸ் தெரிவித்தார். மீண்டும் ரென்னிஸ்விளையாடுவேன் என்று நான்ஒருபோதும் நினைக்கவில்லை. இனி என்னால் கிராண்ட்ஸ்லாம் அல்லது மற்றப் போட்டிகளில் சம்பியன் பட்டத்தை கைப்பற்ற இயலாது. முதலிடமும் இவை நீண்ட தூரம் போய் விட்டது என்று தான் நினைத்தேன். ஆனால், எல்லாம் நடந்ததை பார்க்கும் போது கனவு போன்று உள்ளது. இதனால் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். இது கடின உஞ்ழப்புக்கு கிடைத்த பரிசு. அதை நிறுத்த விரும்பவில்லை.

என்னால் சிறப்பாக ஆட நினைக்கும் வரை போட்டிகளில் பங்கேற்பேன். தொடர்ந்து சிறப்பான பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்துறேன். இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் சிறப்பாக ஆட முடியும் என எண்ணுகின்றேன்.

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் எதிர்பாராத விதமாக அடையந்த தோல்வி என்னால் இன்றும் நம்ப முடியவில்லை. அதில் கிண்ணம் வெல்லும் இலக்குடன் செயற்பட்டேன். அது முடியவில்லை.

கட்டார் ரென்னிஸ் தொடரில் நிச்சயம் கிண்ணம் வெல்வேன் என நம்புகின்றேன். அஸரங்கா அற்புதமான வீராங்கனை. இருப்பினும், வெற்றிக்காக போராடுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவின் வெற்றியிலக்கு 182



(கேப்டவுன்)

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 182 என்ற வெற்றி இலக்கை நோக்கி தென்னாபிரிக்க அணி ஆடி வருகின்றது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கேப்டவுனில் நடைபெற்று வருகின்றது. இதில் 12 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி ஸ்டெயின், ரொபின் பீற்றர்சன், பிலாண்டர் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமள வென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் மதிய இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை பாகிஸ்தான் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அசார் அலி 65, கப்டன் மிஸ்பா உல் ஹக் 44 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைவரும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் பிலாண்டர் நர்ன்கு, ரொபின் பீற்றர்சன், ஸ்டெயின் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். தென்னாபிரிக்க அணி 182 என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடி வருகின்றது. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 338. தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 326.

## சர்ச்சையை ஏற்படுத்திய நடுவர் தீர்ப்பு

(கேப்டவுன்)

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் வீரர் ஜக்ஸ் கலிஸ் பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது போட்டியின் முதல் இனிங்ஸில் ஆட்டமிழப்பு வழங்கப்பட்டமை தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்டமிழப்பு விடயத்தில் தவறு ஏற்பட்டுள்ளதை சர்வதேச கிரிக்கெட் சபையும் ஏற்றுக் கொண்டுள்ளது. தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டத்தில் ஜக்ஸ் கலிஸ் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தில் ஆட்டமிழப்பு வழங்கப்பட்டமை தொடர்பாகவே இந்தச் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

சயீட் அஜ்மலின் பந்துவீச்சில் ஜக்ஸ் கலிஸ் துடுப்பெடுத்தாடும்போது அவர் பந்தொன்றைத் தடுத்தாட முனைந்தபோது, பந்து துடுப்பிலும் காற்தடுப்பிலும் பட்டதாக எண்ணி கள நடுவர் ஸ்டீவ் டேவிட் ஆட்டமிழப்பு வழங்கினார். எனினும் ஜக்ஸ் கலிஸ் உடனடியாகவே அந்த ஆட்டமிழப்பிற்கு எதிராக மீள்பரிசீலனை செய்தார்.

மீள் ஒளிபரப்புக்களின்போது பந்து துடுப்பில் பட்டிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் எல்.பி.டபிள்யூ முறையிலான ஆட்டமிழப்புப் புற்றி ஆராய்ந்தபோது, பந்து விக்கெட்டை உரசிச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டது. மீள் பரிசீலனை விதிகளின்படி நடுவர் தீர்ப்பு தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.நடுவர் பிடிக்கான ஆட்டமிழப்பையேவழங்கியதால், எல்.பி.டபிள்யூ முறையிலான ஆட்டமிழப்பை அவர் நிராகரித்ததாக அர்த்தம் என்பதால் ஜக்ஸ் கலிஸ் ஆட்டமிழக்கவில்லை எனத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றபோதிலும், கள நடுவர் ஸ்டீவன் டேவிஸ் அதை ஆட்டமிழப்பு என வழங்கினார். இவ்விடயத்தில் தவறு ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ள சர்வதேச கிரிக்கெட் சபை, ஜக்ஸ் கலிஸ் ஆட்டமிழப்பு வழங்கியிருக்கப்படக்கூடாது எனவும் தெரிவித்துள்ளது.





யாழ். வேம்படி தேசிய உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது. இதில் வீராங்கனைகளின் அணி நடையையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் முதலிடம் பிடித்த இல்லத்திற்கு கேடயம் வழங்குவதையும், அருகில் பாடசாலை அதிபர் நிற்பதையும் காணலாம். (படம் கே. நந்தகுமார்)

# நிர்வாகத் தெரிவு

(கைதடி)

கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக்கழகத்தின் நிர்வாகத் தெரிவு கடந்த 10ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு சனசமூக நிலைய பொது மண்டத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக மா. நகுலேஸ்வரன், உப தலைவராக வே. ராகுலன், செயலாளராக க. உதயரதன், உப செயலாளராக் க. ஜீவகதாஸ், பொருளாளராக ச. அனுரதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக உறுப்பினர்களாக பூ. குணலிங்கம், து. இராசகுமார், வீ. லகுராஜ், பெர். இரவீந்திரன், க. கபில்ராஜ், சி. நந்தரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கழகத்தின் ஆலோசகராக இராசேந்திரன் பிரதீபர் தெரிவு செய்யப்பட்டார். (80)

## விளையாட்டுச் செய்திகள்

# டர்வின், அலன்டிலான் சிறப்பாட்டம் வென்றது யாழ். மத்திய கல்லூரி

(மானிப்பாய்)

டர்வின், அலன்டிலான் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்று யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும், யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டி கடந்த 8,9ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய மானிப்பாய் இந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை பெற்றது. இதில் பிரதீபன் 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அலன்ராஜ், ஹரிகரன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய அணி அலன்டிலான் - டர்வினின் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டர்வின் 80, அலன்டிலான் 63, நிரோஜ் 24, நிரூபன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

131 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மானிப்பாய் இந்து கல்லூரி அணி 49.1 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை 166 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதில் குகபிரசாத் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும், சேந்தன் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிகரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதன் மூலம் போட்டி விதிப்படி முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்ற யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்றது. (எஸ்.பி.)

# இயக்கச்சி அ.த.க.வின் சம்பியன்கள்

(இயக்கச்சி)

இயக்கச்சி அ.த.க. பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டியில் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வெளியாகியுள்ளது. அதன் விபரம் வருமாறு:

7 வயது ஆண்கள் பிரிவில் ச. துவாரகன், பெண்கள் பிரிவில் கோ. சிலம்பழகி. 9 வயது ஆண்கள் பிரிவில் சி. டிலஷ்சன், பெண்கள் பிரிவில் கா. பாகினி, 11 வயது ஆண்கள் பிரிவில் த. டினுசன், பெண்கள் பிரிவில் க. வாணி; 13 வயது ஆண்கள் பிரிவில் ம. தியர்கேஸ்வரன்; பெண்கள் பிரிவில் ச. லோஜினி, 15 வயது ஆண்கள் பிரிவில் செ. ஜிந்துகரன், ச. பகீரதன், பெண்கள் பிரிவில் க. அஜந்தினி, 17 வயது ஆண்கள் பிரிவில் தி. திலீப், பெண்கள் பிரிவில் வி. ரேவன்ஜா, 19 வயது ஆண்கள் பிரிவில் வி. பைந்தீபன், பெண்கள் பிரிவில் த. விதுஷா ஆகியோர் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டு கிண்ணம் வழங்கப்பட்டது. (112)

# பிரதேச மட்ட வலைப்பந்து தெல்லிப்பளை யூனியன்ஸ் சம்பியன்



(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தெல்லிப்பளைப் பிரதேச பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பளை யூனியன்ஸ் அணியும், மல்லாகம் ஆர்.டி.எஸ். அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை யூனியன்ஸ் அணி 11-07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர், மாவட்ட விளையாட்டுச் செயலகத்தைச் சேர்ந்த விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டுக்கழகத் தலைவர்கள், செயலாளர்கள், வீர, வீராங்கனைகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். (93)

# வென்றது பாடுமீன் அணி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கால்பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பாடுமீன் அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், பாடுமீன் அணியும், சென்.அன்ரனீஸ் அணியும் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் பாடுமீன் அணி ஒரு கோலினை பெற்றது.தொடர்ந்து ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கும் வாய்ப்புக்களை தவறவிட, பாடுமீன் அணி முதல் பெற்ற கோலுடன் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இறுதியில் பாடுமீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# இன்று இறுதி ஆட்டம்

(கொக்குவில்)

கொக்குவில் இந்து கல்லூரியின் விளையாட்டுப் பிரிவு டெங்கு காய்ச்சலினால் உயிர் இழந்த கூடைப்பந்தாட்ட வீரன் கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை கொக்குவில் இந்து கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடத்தி வருகின்றது.

சுற்றுப்போட்டியின் ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.


யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதிய முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் அபார திறமையினை வெளிப்படுத்திய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 76:52 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதிய இரண்டாவது அரையிறுதி போட்டியில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி 64:45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. சென்.பற்றிக்ஸ் அணியும், யாழ்ப்பாணம் இந்து அணியும் மோதும் இறுதிப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

ஸ்டீவ் ஜொப்ஸின் தலைமையில், அப்பிள் நிறுவனம் பயணிக்கத் தொடங்கியதும், தனது திட்டங்களை செயல்படுத்த இறங்கினார். திருமணம் தாண்டிய உறவில் பிறந்த தன் முதல்மகள் லிஸாவின் பெயரில் ஒரு கணனியை உருவாக்கத் தொடங்கினார். அந்த உருவாக்கத்தில், அவரின் வேலை வாங்கும் வழி (style) மிகவும் தாறுமாறாக இருந்தது. தான்தோன்றித்தனமான மாற்றங்களை அவர் கொண்டு வந்தார்.


குழுவையும், ஓரங்கட்டி விட்டு, அடுத்த மொடலை வடிவமைக்கும் குழுவை ஜொப்ஸ் முன்னிறுத்திக் கொண்டிருந்தார். அப்பிள் - 2 இல் வேலை செய்தவர்கள் போஸோஸ் (Bozo) என்று கேலி செய்யப்பட்டனர். அதாவது, தொழில்நுட்பம் அறியாப் பாமரர்கள் என்பதாய். இது ஜொப்ஸின் வேலை வாங்கும் ஸ்டைல். மென்மையான மனம் கொண்டவர்களோ, பர்ரம் பரியப் பார்வை கொண்டவர்களோ அவருடன் வேலை செய்வது மிகக் கடினம்.


பல்வேறு முரண்களைக் கொண்டே எந்த நிறுவனமும், சமூகமும் முன் செல்லும் என்றாலும், முரண்கள் பெரும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் நிறுவனத்தின் நிதி நிலையும், ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் தொழிலும். எனவே அப்பிளின் அந்தப் பகுதியையும் ஒரு முக்கிய அங்கமாக மதித்து, அணைத்துச் செல்ல வேண்டும். தாங்கள் ஒதுக்கப் படுவதாக அவர்கள் நம்பினால், அது அவர்களின்



# காட்டோடைகளும் கங்காணிகளும்

**– அருணன் மதுரா –** **2**






அவ்வுருவாக்கத்தில் குழுவை பலநேரங்களில் அவமதித்தார். தன் மனத்தில் இருந்த கனவை நனவாக்கும் முயற்சியில், நடைமுறைச் சங்கடங்களை அவர் உணர்ந்து கொள்ளவேயில்லை. எப்படியாகினும் தன் கனவு நிறைவேற வேண்டும். தனது வடிவமைப்பு செயல்படுத்தப் படவேண்டும் என்னும் வழியில், குழுவின் ஆளுமைகளைச் சிதைத்தார். கடுஞ்சொற்களால் அவமதித்தார். நிறுவனத்தை நடத்தும் மற்ற மூத்த இயக்குநர்களுக்கும், உயர் நிர்வாகத்தினருக்கும் இது அழிவை நோக்கி இட்டுச் செல்லக் கூடும் என்ற அச்சம் பிறந்தது. இக்காலகட்டத்தில், அப்பிள் நிறுவனத்தின் மிக முக்கிய வருமானம் (75%) கொண்டு தரும் அப்பிள் - 2 கம்யூட்டர் குழுவையும், உற்பத்திக் உணர்வழுத்தப் போராட்டங்களை ஏற்படுத்தும் போது, அந்நிறுவனத்தில் வேலை செய்யும் மனிதர்களை அது பாதித்து, அது பெரும் முன்னேற்றத் தடையாக இருக்கும் என்று அஞ்சி, ஜொப்ஸை, அவர்கள் லிஸா கணனிக் குழுவில் இருந்தே அகற்றி விட்டனர். அது ஜொப்ஸை மேலும் வெறியேற்றியது.

ஒரு கட்டத்தில், இம்முரண்களைச் சாதாரண தொழில் நிபுணர்களால் தாங்க முடியாமல் போகவே, அவர்கள் ஜொப்ஸிடம், இப்பிரச்சினைகளைப் பற்றிப் பேசி, நிறுவனத்தின் தொழிலை நடத்திச் செல்ல ஒரு தலைமை நிர்வாக அதிகாரி வேண்டும் என்று வற்புறுத்தி ஒப்புக் கொள்ள வைக்கின்றனர். புதிது புதிதாய் கணனிகளும், தொழில் நுட்பங்களும் அவசியம்தான். ஆனால், அதற்கான நிதியாதாரங்கள் ஏற்கனவே இருக்கும் கணனி மொடல்களின் விற்பனை வழியாகவே வரும். தொழில் முனைப்பும், அறிவியற் திறனும் செயற்திறனைப் பாதிக்கும் எனச் சொல்லி அவரை ஒத்துக் கொள்ள வைக்கிறார்கள்.

வோல்டர் ஐசக்ஸன், அப்பிளின் இந்தக் கட்டத்தை மிகத் துல்லியமாக எழுதியிருக்கிறார். அப்பிள் ஒரு போர்ச்சூன் 500 நிறுவனமாவதற்கான முக்கிய காரணம் ஜொப்ஸ். அப்பிளின், நிர்வாகம் தடுமாறுவதற்குக் காரணமும் அவரே. இக்கருத்தை முன் வைக்க, ஐசக்ஸன் அனைத்து முக்கிய அப்பிளின் மிக முக்கிய அதிகாரிகளிடமும் பேசி, அவர்களின் கோணத்தையும் ஆராய்ந்து, அப்பிள் நிறுவனத்தை, ஒரு பெரும் வெற்றிகரமான தொழில் நிறுவனமாக்கத் தடை, ஜொப்ஸின் முரட்டுத்தனமான, கோணலான நோக்குக் கொண்ட மேலாண் வழிமுறை என்னும் வாதத்தை மிக வலுவாக வைக்கிறார். அதைச் சரி செய்ய அப்போதைய அப்பிள் நிறுவனத்தில் ஆட்கள் யாரும் இல்லாத பட்சத்தில், அவர்கள் வெளியில் இருந்து ஒரு முக்கிய நிர்வாக அதிகாரியை நியமிக்கச் செய்த முடிவும் சரியே எனவும் தோன்றுகிறது

ஜொப்ஸை வழிநடத்தி, அவரை ஒரு நல்ல மேலாண் அதிகாரியாக மாறும் வரை, அவருக்கு ஒரு மூத்த சகா வேண்டும் எனத் தீர்மானித்து, ஸ்கல்லியைச் சென்றடைந்து, அவரை அப்பிளின் முக்கிய நிர்வாக அதிகாரியாக்கி விடுகிறார்கள். பணியின் துவக்க காலம், தேனிலவுக்கு ஒப்பானது. உண்மையான முகமும், திறனும் முழுக்கத் தெரியாதபோது, இருவருமே ஒருவருக்கொருவர் அன்புடனும், காதலுடனும் இருப்பதுதானே உலக வழக்கு.

தான் நடத்தும் தொழில் என்ன, உருவாக்கும் பொருட்கள் என்ன செய்யும், அவற்றின் நிறைகுறைகள் என்ன என்பது பற்றிய முழு அறிவு இல்லாமல், அத்தொழிலை நடத்துவது கடினம். இது, இயற்கையாகவே ஒரு வித பயத்தைக் கொடுக்கத்தான் செய்யும். எனவே, ஸ்கல்லி, தனது முயற்சிகளுக்கு ஜொப்ஸின் அங்கீகாரத்தை நாடத் துவங்குகிறார். ஜொப்ஸ் ஒரு destructive genius. தனது வசீகரத்தை மெல்ல மெல்ல ஸ்கல்லியின் மீது செலுத்தத் துவங்குகிறார். இக்கட்டத்தை ஐசக்ஸன் மிகச் சரியாகப் பிடித்து, வெளிக்காட்டுகிறார். ஒரு வழிகாட்டியின் இடத்தில் இருந்து, ஒரு குருவின்



பீடத்தில் இருந்து, ஜொப்ஸை வழிகாட்ட வேண்டிய ஸ்கல்லி, ஜொப்ஸின் அங்கீகாரத்தை வேண்டும் நபராக மாறியது ஒரு பெரும் பிறழ்வு. ஜொப்ஸ், ஸ்கல்லியையும் டொமினேட் செய்யத் துவங்க, அப்பிள் நிறுவன மேலாண்மை - மீண்டும் பரமபதக் கட்டத்தின் முதலிடத்தில்.

**(தொடரும்)**

# தற்கொலைக்கு முயற்சித்த இ


"என்னுடைய படங்களைப் பற்றி பேச நான் விரும்பவில்லை. என்னுடைய படங்களை கழித்துப் பார்த்தால் நான் பூஜ்யம்தான். நான் எதற்காகவும் வருந்துவதில்லை. கடைசி-வரை நான் சினிமாவைத் தவிர வேறு எதையும் சிந்தித்ததில்லை" -"சம்திங் அன் ஓட்டோபயோகிராபி" யில் அகிரா குரோச்வா (1910 - 98)


1923ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட காண்ட்டோ பூகம்பத்தில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேருக்கு மேல் உயிரிழந்தனர். அப்போது அகிரா குரோசவாவுக்கு 13 வயது. அகிராவின் மூத்த சகோதரர் ஹைகோ, இவரை அழைத்துக் கொண்டு நாள் முழுக்க பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றி காண்பித்தார். எங்கு பார்த்தாலும் பிணக்குவியல். நகரம் புரட்டிப் போடப்பட்டிருந்தது. அனைத்தையும் உற்று கவனிக்கும்படி ஹைகோ வற்புறுத்தினார். அன்றிரவு முழுவதும் உறக்கம் வராமல் தவித்த அகிரா, தன் சகோதரனிடம் இவையெல்லாம் எப்படி நடக்கிறதென்று கேட்டார்.

"இது இயற்கையின் சீற்றம். பயத்தினால் உன்னுடைய கண்களை மூடிக் கொண்டால் எல்லாமே பயமாகத்தான் தெரியும். துணிவுடன் பார்த்தால் எதுவும் பயமாகத் தெரியாது" என்று ஹைகோ கூறினார். பின்னாளில் தன்னுடைய கருத்துகளைத் துணிச்சலுடன் திரைப்படங்களில் புகுத்த அகிராவுக்கு இதுவே காரணமாக இருந்தது.

அகிராவின் தந்தை, சமுராய் குடும்பத்தைச் சேர்ந்தவர். மார்ஷல் ஆர்ட் பயிற்சியளிப்பதில் வல்லவராக இருந்தார். ஏழாவது மகனாக பிறந்த காரணத்தால் மிகவும் மெலிந்திருந்தாலும், கென்டோ வாள் பயிற்சியில் முதல் மாணவனாக திகழ்ந்தார் அகிரா. அகிராவுக்கு ஓவியத்தில் நாட்டமிருந்தது. ஜப்பானிய மேற்கத்திய இலக்கியங்களை குறிப்பாக ரஷ்ய இலக்கியங்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டினார்.




1936இல் தோஹோ ஸ்டுடியோவில் சேர்ந்த அகிரா, 1943இல் முதன் முதலாக "சன்ஷிரா





# நாக்கூசாமல் பொய் பேசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்!

- தியாகு -

வடக்கு கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கீடு செய்திருந்த நிதியினை அரசாங்கம் திடீரென திருப்பி எடுத்துக் கொண்டதாக, ஒரு பிரசாரத்தைக் கூட்டமைப்பு "கோயபல்ஸ்கள்" அண்மையில் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள். வழமையான தொற்று வியாதிபோல, இந்த அண்டப் புளுகை புலம்பெயர் தமிழ் ஊடகங்களும் விழுங்கிவிட்டு, பின்னர் தமக்குரிய பாணியில் வாந்தி எடுத்துக் கொண்டன.

உண்மையில் இதில் உள்ள உண்மை என்ன?

உள்ளூராட்சி சபைகள் தமக்கு ஒதுக்கப்பட்ட சில விடயங்களில் பொதுமக்களிடம் இருந்து சிலவகை வரிகளை அறவிட்டு வந்தாலும், அவை அவற்றின் வளர்ச்சிப் பணிகள், செயற்பாடுகளுக்குப் போதுமானவை அல்ல. எனவே அவற்றின் சீரான செயற்பாடுகளுக்கென அரசாங்கம் வருடாவருடம் நிதி ஒதுக்கிக் கொடுப்பது வழமை. இந்த நிதி ஒதுக்கீடு இன, பிரதேச வேறுபாடு இன்றிச் செய்யப்படுவதாகும். குறிப்பிட்ட நிதியாண்டில் ஏதாவது ஒரு சபை இந்த நிதியினைப் பயன்படுத்தாமல் அல்லது பயன்படுத்தியது போக மீதமான பணம் இருந்தால், அந்த நிதியை திறைசேரி மீள எடுத்துக் கொள்வது வழமை. சில நிர்வாக ஒழுங்குகளுக்காகவும், அடுத்த வருடத் திட்டமிடுதலுக்காகவும் இந்த விதிமுறை கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. பின்னர் புத்தாண்டில் புதிதாக எல்லாச் சபைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இது சாதாரண மக்களுக்குத் தெரியாவிடினும், அரசியலில், அதுவும் குறிப்பாக உள்ளூராட்சி அரசியலில் ஈடுபடும் அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம்.


தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள சபைகளுக்கு ஒதுக்கிய நிதியை அரசாங்கம் திரும்ப எடுத்துக் கொண்டுவிட்டது என்றும், அதற்கான காரணம் தம்மை இனவாத ரீதியாக நடாத்தி, மக்களிடமிருந்து தனிமைப்படுத்தத்தான் என்றும் செய்யும் பொய்ப் பிரசாரத்தின் காரண காரியம் இது தான். அதற்குக் காரணம் என்னவெனில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிர்வாகத்தின் கீழ் உள்ள சபைகள் தமக்கு ஒதுக்கிய பணத்தைச் சரியான முறையில் பயன்படுத்தாதது தான். முன்னைய காலங்களிலும் தமிழ்க் கட்சிகள் இவ்வாறு நடந்து கொண்டமைக்குப் பல உதாரணங்கள் உள்ளன.

இது தற்செயலாக நடைபெறும் விடயமல்ல. பிற்போக்குத் தமிழ் தலைமைகள் என்னதான் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசினாலும், அரசாங்கம் தமக்கு ஒதுக்கும் நிதியினைக்கூட சாதாரண மக்களின் அன்றாட அவசரப் பிரச்சினைகளுக்குச் செலவழிக்கமாட்டார்கள். அப்படிச் செய்துவிட்டு. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. இனப்பாகுபாடு காட்டுகிறது என்று பொய்ப்பிரசாரம் செய்து, அப்பாவிப் பொதுமக்களை ஏமாற்றி வாக்கு வேட்டையாடுவது அவர்களது வழமை. ஆனால் தமக்குத் தேவையான எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து கொள்வார்கள். கொழும்பில் வீடு வாங்கி சொகுசாக வாழ்வார்கள். குடும்பத்தை இந்தியாவில் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். பிள்ளைகளை வெளிநாட்டில் படிப்பிப்பார்கள். இப்படிப் பல.

ஆரம்ப காலத்தில் இருந்தே தமிழ் பகுதிகளில் இடதுசாரிகள் செல்வாக்குப் பெறுவதை தடுப்பதற்காக "தமிழனுக்குத் தேவை சோறல்ல, சுதந்திரம்" என வீராவேசமாகக் கோசம் போட்டு, இறுதியில் தமிழனுக்குச் சோறும் இல்லாமல் சுதந்திரமும் இல்லாமல் செய்தவர்கள் இந்தத் தமிழ்த் தலைமைகள்தான். பொதுமக்களுக்காக இவர்கள் அரசாங்கத்திடம் எந்தவொரு கோரிக்கையையும் எப்பொழுதும் வைத்ததும் கிடையாது. (தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஒரேயொரு முறை சிறிமாவோவின் 1970 - 77 ஆட்சிக்காலத்தில் அவ்வரசில் (வலதுசாரி) அமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க மூலம் தெல்லிப்பளையில் ஒரு உப தபாற்கந்தோர் அமைத்ததாகக் கூறுவார்கள்!)

இப்படி எல்லாம் சுத்துமாத்து அரசியல் செய்துவிட்டு, அரசாங்கம் தந்த நிதியைத் திரும்பப் பறித்துக் கொண்டுவிட்டது என்று நாக்கூசாமல் பொய் சொல்வதற்கு, அவர்களுக்கு ஏன் தயக்கம் வர வேண்டும்?

(நன்றி: வானவில் 25)



## பெருவில் 5000 ஆண்டுகள் பழைய கோவில்!

தென்அமெரிக்க நாடான பெருவில், எல் பராய்சோ என்னுமிடத்தில் 5000 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கோவில் ஒன்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். செவ்வக வடிவில் நுழைவு வாயிலை கொண்டுள்ள இந்த கோவிலின் மையத்தில் யாகம் வளர்ப்பதற்கான இடம் இருப்பதையும் கண்டனர். இங்கு சுமார் 8 மீற்றர் அளவிலான பிரமிட் ஒன்றும் உள்ளது. இந்த கண்டுபிடிப்பின் மூலம் கிறிஸ்து பிறப்பிற்கு 3000 வருடங்களுக்கு முன்பே நாம் நினைத்ததைக் காட்டிலும், மக்கள் மிகவும் நாகரிகமாகவும் நெருக்கமாகவும் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. ஆண்டிஸ் மலைப்பகுதிகளில் அப்போது வளமுடன் வாழ்ந்த முக்கிய இடங்கள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. இது அகழ்வாராய்ச்சியாளர் மற்றும் புதையல் வேட்டையாளர்களின் ஒரு உறுத்தலாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

---

சுகட்டா" என்ற படத்தை இயக்கினார். அது தோல்வியடைந்தாலும் திரைப்பட தயாரிப்பு அனுபவங்கள் அவருக்குக் கிடைத்தன. அகிராவுக்கு திரைப்படங்களை இயக்குவதற்கு பயிற்சியளித்தவர் கஜி[illegible] ak மோட்டோ.

1944இல் "தி மோஸ்ட் பியூட்டிபுல்" என்ற படத்தை இயக்கினார். அதுவும் வெற்றியடையவில்லை. 1945 இல் இவரது "தி மென் ஹூ ட்ரெட் ஒன் தி டைகர்ஸ் டேல்" என்ற படம் சமுராய் பழக்கவழக்கங்களைப் பிரதிபலிப்பதாக இருந்ததால், அந்த சமயத்தில் ஜப்பானை கைப்பற்றிய அமெரிக்க இராணுவம், இது ஜப்பானியர்களிடையே விடுதலை வேட்கையை ஏற்படுத்துமென்று கருதி, தடை செய்தது. அமெரிக்கர்கள் ஜப்பானை விட்டுச்சென்ற பின் ஏழாண்டுகள் கழித்து இத்திரைப்படம் வெளியாயிற்று. அதற்குள் இவர் இயக்கிய "நோ ரெக்ரெட்ஸ் ஃபோர் அவர் யூத்" திரைப்படம் வெளிவந்தது.

"ஒரு பெண், தன் கணவன், தந்தை ஆகியோரை கம்யூனிஸ்ட்களாக கருதி அளிக்கப்படும் தண்டனையை எதிர்த்துப் போராடி வெற்றிபெறும் கதை என்பதால் என்னுடைய கருத்துகளைத் துணிச்சலுடன் அதில் புகுத்தினேன்" என்று அகிரா பின்னர் கூறினார்.

1945- "ட்ரங்கன் ஏஞ்சல்" படத்தில் அகிராவுக்கு சிறந்த இயக்குநர் என்ற அந்தஸ்து உறுதியானது. 1950ஆம் ஆண்டு வெளியான "ராஷோமான்", படத்தில் ஒரு விதவையைக் கற்பழித்த சாமுராய் ஒருவன் கொலை செய்யப்படுவதை

# இயக்குநர்



நான்கு பேர் வித்தியாசமான கோணங்களில் விவரிப்பதை படமாக்கியிருந்தார். இத்திரைப்படத்தை பற்றி அகிரா கூறுகையில்,

"மனிதர்கள் எப்போதுமே தங்களுக்குத்தானே நேர்மையானவர்களாக நடந்துகொள்வதில்லை. தங்களைப் பற்றி சொல்லும்போதுகூட மிகைப்படுத்திச் சொல்வார்கள். இதை மனிதனின் இதயம் ஏற்குமா என்பது கூட சந்தேகம்தான்..." என்று சொன்னார்.

"ராஷோமான்" 1951 வெனிஸ் திரைப்பட விழாவில் சிறந்த வெளிநாட்டு படத்திற்கான அகடமி விருதைப் பெற்றது. தொடர்ந்து வெளிவந்த "தி இடியட்" தோல்வியடைந்தாலும் "ராஷோமான்" அளித்த உலக அளவிலான வெற்றி அகிராவுக்கு தன்னம்பிக்கையை அளித்தது. அடுத்து இகுரா (1952), ஸெவன் சாமுராய் (1954), த்ரோன் ஓஃப் பிளட் (1957) ஆகிய படங்கள் அகிராவை புகழ் உச்சிக்குக் கொண்டு சேர்த்தன. சர்வதேச அளவில் புகழ்பெற்ற இவரது ஸெவன் சாமுராய் 1960இல் "தி மெக்னிபிஷண்ட் ஸெவனாக" ரீமேக் செய்யப்பட்டது.

மாக்சிம் கார்க்கியின் நாவலை தழுவி துணிச்சலுடன் "லோயர் டெப்திஸ்" (1957) வர்த்தக ரீதியாக வெற்றி பெற்றதோடு, பெர்லின் உலக திரைப்பட விழாவிலும் பரிசு பெற்றது. பின்னர் ஹொலிவுட்டில் "ஸ்டார் வோர்ஸ்" என்ற பெயரில் ரீமேக் செய்யப் பட்டது. "யோஜிம்போ" (1961) ஹொலிவுட்டில் "எ பிஸ்ட்ஃபுல் ஓஃப் டொலர்ஸ் (1964) என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டது.

1965ஆம் ஆண்டு "ரெட் பியர்ட்" என்ற படத்தை ஆறுமாதத்திற்குள் முடித்துக் கொடுப்பதாக கூறிய அகிரா, தன்னுடைய 16 படங்களில் தொடர்ந்து கதாநாயகனாக நடித்துவந்த தோஷிரா மைஃபூன் என்ற நடிகரை தாடி வளர்க்கும்படி கூறினார். ஆனால் படம் முடிய இரண்டாண்டுகள் ஆகிவிட்டதால் நடிகர், தயாரிப்பாளர் இருவருக்கும் அகிராவின் மேல் இருந்த நம்பிக்கை போய்விட்டது. இருப்பினும் இரண்டாண்டுகள் பொறுமையாக இருந்து படம் முடிவடைந்ததும் இனி அகிராவின் படங்களில் நடிப்பதில்லை என்று கூறி தோஷிரோ மைஃபூன் அகிராவிடமிருந்து விலகினார். எதிர்பார்த்தபடி படமும் வெற்றிபெறவில்லை.

ஹொலிவூட்டிலிருந்து ஜப்பான் திரும்பிய அகிரா, 1970ஆம் ஆண்டு குடிசைப் பகுதியில் வசிக்கும் புத்திசுவாதீனமற்ற சிறுவனை மையமாக வைத்து இயக்கிய "தோ தெஸ்காதென்" படத்தை பத்திரிகைகள் பாராட்டினாலும், வர்த்தக ரீதியில் தோல்வியடைந்தது. இதனால் மனநிலை, உடல் நிலை பாதிக்கப்பட்ட அகிரா, 1971ஆம் ஆண்டு வாளினால் கழுத்தை அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயற்சித்தபோது காப்பாற்றப்பட்டார்.

நான்காண்டுகால இடைவெளிக்குப் பின்னர் 1890ஆம் ஆண்டில் "தெர்ஸு உஸாலா" என்ற படத்திற்கு, இரண்டாவது முறையாக டெனோ டெலோ விருதும், அகடமி விருதும் பெற்றார். ஆனால் தொடர்ந்து படம் தயாரிக்க பணம் இல்லை என்றபோது, ஹொலிவுட் இயக்குனர்கள் பிரான்சிஸ் போர்ட் கொப்பலோ, ஜோர்ஜ் லூகாஸ், ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ஆகியோர் அவருக்கு பண உதவி அளிக்க முன்வந்தனர். அவர்கள் ஒத்துழைப்புடன் தயாரித்த "காகெமுஷா" வர்த்தகரீதியில் வெற்றிபெற்றதுடன் 1980ஆம் ஆண்டு வெனிஸ் திரைப்பட விழாவில் விருதையும் பெற்றது.

தொடர்ந்து ரன் (1985), அகிரா குரோசவா ட்ரீம்ஸ் (1990), ராப் ஸோடி இன் ஆகஸ்ட் (1991), மடாடயோ (1992) ஆகிய படங்கள். 1995ஆம் ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழாவில் அகிராவுக்கு சிறப்பு விருது அளிக்கப்பட்டது. "அகிரா குரோசவா ட்ரீம்ஸ்" ஏறக்குறைய அவரது வாழ்க்கையை விளக்குவது.

இவரது படங்கள் பெரும்பாலும் சாதாரண மக்களின் வாழ்க்கையையும் சமுராய் வீரர்களின் சாகசங்களையும் விளக்குவன. "வாழ்நாள் சாதனையாளர்" விருதைப் பெற்ற முதல் ஜப்பானியரான இவருக்கு சர்வதேச திரைப்பட இயக்குநர்கள் வரிசையில் சிறப்பான இடம் உண்டு.

# சமகால தமிழ் சினிமா

# அவநம்பிக்கைகள், நம்பிக்கைகள்

தமிழ் சினிமாவின் முகம் எப்படியிருக்கிறது? அரிதான சில விதிவிலக்குகளைத் தவிர்த்தால் தமிழ் சினிமாவின் உள்ளடக்கமும் திரைமொழியும் முதிர்ச்சிக்கான எவ்வித அடையாளமுமில்லாமல் இன்னமும் நாடக மரபிலேயே தேங்கிக் கிடக்கிறது. காட்சி ஊடகத்தின் அடிப்படைகளைப்புரிந்து கொள்ளாமல் இன்னமும் பக்கம் பக்கமாக வசனம் பேசிக் கொண்டிருக்கிறது. அகரீதியான உணர்வுகளை பௌதிகப் பொருட்களை உதாரணம் காட்டி விளக்குவது போன்ற அபத்தங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. தன்னுடைய காதலியால் பாதிக்கப்பட்டதாக உணர்கிற இளைஞன் பாடுவதில் ஒரு வரி.. 'நெஞ்சம் ஒரு காத்தாடி'... இது காட்சிப்படுத்தப்படும் போது அந்த இளைஞனின் பின்னே காற்றாடி விடும் சிறுவர்கள் காட்டப்படுகிறார்கள்.

அளவிற்கான தகுதியுடன் ஒரு சமகால சினிமா கூட இங்கு இல்லை. சமகால சமூகப் பிரச்சினையை வணிக நிர்ப்பந்தங்கள் இல்லாமல் யோக்கியமாக முன்வைக்கும் ஒரு வெகுஜன திரைப்படம் கூட இங்கு கிடையாது. இது ஒரு கசப்பான உண்மை.

இதற்காக சினிமா இயக்குநர்களை மாத்திரமே குறை சொல்ல விரும்பவில்லை. இயக்குநர்களுக்குள் ஒளிந்திருக்கும் வணிகர்களும், இந்த வணிகர்களை பின்னாலிருந்து இயக்கும் தயாரிப்பாளர்களும் எது எளிதாக விற்குமோ அதையே உற்பத்தி செய்ய விரும்புகிறார்கள். இந்த நுகர்வுக் கலாசார சூழலில் நமது ரசனை மாறினாலொழிய, இது மாறப் போவதில்லை. சினிமா ஒரு சமூகத்தை வலுவாக பாதிக்கும் காட்சி ஊடகம் என்பது நிரூபணமாகியிருக்கிறது. நம்மை ஆள்பவர்களையே சினிமாவிலிருந்து தேர்ந்தெடுக்குமளவிற்கான அறியாமையுடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நாம். ஒரு சினிமாவை

எப்படி?' பதின்ம வயதுகளைத் தாண்டின காதலில் ஏற்படும் பிரச்சினைகளை எள்ளலோடும் ஒரு தீவிர மற்ற தன்மையிலும் முன்வைத்தது. இதே மாதிரியான காதலில் ஏற்படும் ஆண்-பெண் உறவுச் சிக்கலை தீவிரமான பார்வையில் சொல்லிச் சென்றது கௌதமின் 'நீதானே என் பொன் வசந்தம்'. இந்த இயக்குநரின் முந்தைய திரைப்படங்களில் ஒன்றான 'விண்ணைத் தாண்டி வருவாயா'வின் நீட்சி அல்லது இன்னொரு பரிமாணம் என 'நீதானே என் பொன் வசந்த'த்தை சொல்லலாம்.

இந்தக் காதல் குறித்து இதுவரை தமிழ் சினிமா ஏற்படுத்தி வைத்திருக்கும் அத்தனை பிம்பங்களையும் அடித்துத் துவைத்திருக்கிறது 'அட்டகத்தி'. 'காதல் -ன்றது ஒருத்தனுக்கு ஒரு முறைதான் வரும்' என்று லாலாலா...பின்னணியுடன் வரும் அபத்தமான வசனங்களை எள்ளி நகையாடியிருக்கிறது 'அட்டகத்தி'.

நாம் காலையில் உபயோகிக்கும் பற்பசை முதல் இரவில் உபயோகிக்கும் ஆணுறை வரை அனைத்தையும் தீர்மானிப்பது நம்மை ஆளும் அரசியல் என்பதை சொல்கிறது மதுபானக்கடை. கதை என்று

**சர்வதேச தர அளவிலான சினிமாவுடன் ஒப்பிடக்கூடிய அளவிற்கான தகுதியுடன் ஒரு சமகால சினிமா கூட இங்கு இல்லை. சமகால சமூகப் பிரச்சினையை வணிக நிர்ப்பந்தங்கள் இல்லாமல் யோக்கியமாக முன்வைக்கும் ஒரு வெகுஜன திரைப்படம் கூட இங்கு கிடையாது. இது ஒரு கசப்பான உண்மை.**

சமீபத்திய 'நீதானே என் பொன் வசந்தம்' சினிமாவில் வரும் காட்சி இது! எப்படி இருக்கிறது பாருங்கள்... இதுதான் இன்றைய தமிழ் சினிமாவின் ஒரு snapshot.

தமிழ் சினிமாவின் சமகால இயக்குநர்கள் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வதில் மாத்திரம் நவீனத்தை தேடுகிறார்கள். இந்த சவுண்ட் சிஸ்டத்தை அறிமுகப்படுத்தி யிருக்கிறோம், 'இந்தக் கமராவை பயன்படுத்தியிருக்கிறோம்' 'இந்த நடிகர் ஒப்பனைக்காக இத்தனை மணி நேரத்திற்கும் மேல் அமர்ந்திருந்தார்' போன்ற trivia-க்களே நேர்காணல்களில் புளகாங்கிதமாக சிலாகிக்கப்படுகின்றன. தங்கள் படத்தின் சிறப்பம்சமாக இவற்றையே முன்னிறுத்துகிறார்கள். ஆனால் வெறுமே தொழில்நுட்பமும் உழைப்பும் மாத்திரமா சினிமா? காட்சிகளின் அழகியல் மாத்திரமா?. தங்க நிப் கொண்ட பேனா கொண்டு எழுதினால் அது உலக இலக்கியமாகி விடுமா? 'வித்தியாசமாக' உருவாக்கியிருக்கிறோம் என்கிற பாவனையில் முன்வைக்கப்

எப்படி அணுக வேண்டும், எப்படிப் பார்க்க வேண்டும் என்பது பற்றிய புரிதலே நம்மிடமில்லை. அது ஏற்படுத்தும் பாதிப்பு தன்னிச்சையாக நம் ஆழ மனங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணராமல் அதை அலட்சியமாகப் பார்க்கும் மனோபாவம்தான் பொதுவாக இருக்கிறது. 'சினிமா ரசனையை கல்வித்திட்டத்தில் சேர்க்க வேண்டும்' என்கிற குரல் இந்தச் சமயத்தில் முக்கியமானதாகத் தெரிகிறது.

இந்த துர்ப்பாக்கியமான சூழலில் கடந்த ஆண்டில் வெளியான, ஓரளவுக்காவது கவனிக்கத்தக்க தமிழ் சினிமாக்களைப் பற்றி ஒரு பறவைப் பார்வை.

மாற்றான், தாண்டவம், பில்லா -2, சகுனி போன்ற, வயிறு குலுங்க சிரிக்க் வைக்கும் அபத்தமான சண்டைக்காட்சிகளாலும் பஞ்ச் டயலாக்குகளாலும் தங்களின் நாயக பிம்பத்தை தொடர்ந்து கட்டமைத்துக் கொண்டிருக்கும் ஹீரோக்களின் படங்கள்

எதுவுமில்லாமல் மதுபானக் கடையில் நிகழும் சம்பவங்களையே கோர்வையாக தொகுத்து 'மதுபானக் கடை'யாக உருவாக்கியிருக்கும் வகையில் முக்கியமானதொரு காட்சி ஊடக ஆவணமாக திகழ்கிறது 'மதுபானக்கடை'.




படும் இந்தத் திரைப்படங்களின் உள்ளடக்கமும் மையமும் என்னவென்று பார்த்தால் காலம் காலமாக தமிழ் சினிமாவிற்கென்று பிரத்தியேகமாக உள்ள அதே மசாலா வார்ப்புகள், சம்பிரதாயங்கள், வணிகச் சூத்திரங்கள். இதையே விதவிதமான லேபிள் ஒட்டி மார்க்கெட்டிங் செய்கிறார்கள். சர்வதேச தர அளவிலான சினிமாவுடன் ஒப்பிடக்கூடிய

**இயக்குநர்களுக்குள் ஒளிந்திருக்கும் வணிகர்களும், இந்த வணிகர்களை பின்னாலிருந்து இயக்கும் தயாரிப்பாளர்களும் எது எளிதாக விற்குமோ அதையே உற்பத்தி செய்ய விரும்புகிறார்கள். இந்த நுகர்வுக் கலாசார சூழலில் நமது ரசனை மாறினாலொழிய இது மாறப் போவதில்லை.**

மண்ணைக் கவ்வியது நல்ல சகுனம். மாறாக குறைந்த பட்ஜெட், பரவலாக அறிமுகமாகாத நடிகர்கள், அடிப்படையான தொழில்நுட்பம் போன்றவற்றுடன் இருந்தாலும் சொல்கிற கதையை நேர்மையாக, சுவாரசியமாக சொன்னால் தங்களால் ஜெயிக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார்கள் சில புதுமுக இயக்குநர்கள்.

காதலில் சொதப்புவது எப்படி? (பாலாஜி மோகன்), பீட்சா (கார்த்திக் சுப்பராஜ்), அட்டகத்தி (ரஞ்ஜித்), நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம் (பாலாஜி தரணீதரன்), மதுபானக்கடை (கமலக் கண்ணன்) போன்ற அறிமுக இயக்குநர்க்ள் தங்களின் பிரத்தியேக திறமையால் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

மேலும் திறமையான முறையில் உருவாக்கப்பட்ட சிறுமுதலீட்டுப் படங்கள் வரவேற்பினைப் பெறுவதும் ஸ்டார் நடிகர்கள் நடித்த மசாலாக்கள் தோற்றுப் போவதையும் வைத்து தமிழ் சினிமாவில் புரட்சி ஏதேனும் ஏற்பட்டு விட்டது என்று கருதுவதற்கு இடமில்லை. இது ஒரு தற்கால நிலையாக இருக்கலாம். வருகிற வருடத்தில் பெரிய பட்ஜெட் படங்கள், பஞ்ச் டயலாக் நடிகர்களின் படங்கள் தொடர்ந்து வெற்றி பெற்றால் நிலைமை தலைகீழாக மாறலாம். 80களில் தமிழ் சினிமாவில் நிகழ்ந்த .மாற்றத்தை குழி தோண்டிப் புதைத்த 'சகலகலா வல்லவ்னை' நினைவு கூரவும்!

பாலாஜி மோகனின் 'காதலில் சொதப்புவது

வழக்கு எண் 18/9 ஒரு குறிப்பிடத்தகுந்த முயற்சி என்றாலும் பெண்களின் மீதான வன்முறை, வர்க்க அரசியல், நகர்மயமாயதலின் துயரம், சமகால காதல் என்று பல விஷயங்களை ஒரே திரைப்படத்தின் மூலமாக உணர்த்த வந்ததில் ஓர் ஆவணப் படத்தின் வாசனையும் பிரசார தொனியும் வந்து விட்டன.

'பீட்சா' படத்தில் தர்க்கப் பிழையும் நம்பகத் தன்மையற்ற தன்மையும் இருந்தாலும் படத்தைப் பார்த்து முடித்த பிறகுதான் அவற்றைப் பற்றி யோசிக்க வைக்குமளவிற்கு சுவாரசியமான திரைக்கதையின் மூலம் கவனத்தை ஈர்த்திருந்தார் கார்த்திக் சுப்பராஜ். இந்த வருடத்தில் வியாபார ரீதியாக மிகப் பெரிய வெற்றி பெற்றது விஜய்யின் 'துப்பாக்கி'. வழக்கமான வணிகமசாலா திரைப்படமென்றாலும் ஆறுதலளிக்கும் வகையில் தனது அதிநாயக பிம்பத்தை பெருமளவிற்கு கைவிட்டிருந்தார் விஜய். 'இஸ்லாமியர்கள் தீவிரவாதிகள்' என்று பொதுப்புத்தியில் தொடர்ந்து கட்டமைக்கப்படும் அரசியலை இந்தப்படமும் கடைப்பிடித்து எதிர்ப்பைச் சம்பாதித்தது.

தமிழக மீனவர் பிரச்சினையைப் பற்றி பேசும் படம் என்பதான சித்திரத்தை அது வெளிவருவதற்கு முன் அளித்திருந்தது 'நீர்ப்பறவை'. ஆனால் அது மிகப் பெரிய வதந்தியாக முடிந்து போனது

(17ஆம் பக்கம் பார்க்க)

# நீர்வாழ் உயிரினவளர்ப்பு அதிகாரசபையின் பிராந்திய அலுவலகம் கிளிநொச்சியில்



இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் கிளிநொச்சி பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயத்தைத் திறந்து வைப்பதற்காக கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரட்ன கிளிநொச்சிக்கு கடந்த வெள்ளிக்கிழமை செய்திருந்தார்.

கிளிநொச்சியில் 230 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் கிளிநொச்சி பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயத்தை அமைச்சர் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து ராஜித சேனாரட்ன உரையாற்றும்போது, கிளிநொச்சி மாவட்ட மக்களினதும் பிரதேசத்தினதும் அபிவிருத்தி மற்றும் நலன்கள் தொடர்பாக நான் கூடுதலான அக்கறையை வைத்திருக்கிறேன்.

போர் முடிந்த பின்னர் பல தடவை இங்கே வந்து பல இடங்களுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்து, கடற்றொழில் துறையை விரிவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.

இந்த மாவட்டத்தில் கடற்றொழில் துறையை மேம்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தோடு என்னை அடிக்கடி அழைத்து இந்தத் தொழிலாளர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்தி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களுக்கு நன்று தெரிவிக்கிறேன்.

அவருடைய கோரிக்கைக்கு ஏற்ப இன்றும் இங்கு பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுத்தருமாறு கேட்டிருக்கின்றார். அதனடிப்படையில் இந்த வருடம் ஐஸ் உற்பத்தி நிலையம் ஒன்றினை அமைக்கவும் குளிர்சாதன வாகனம் ஒன்றைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வில், அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான வள்ளம் மற்றும் அதற்குரிய இயந்திரங்கள், இருபது இலட்சம் பெறுமதியான குல்லாக்கள், வலைகள் என்பனவும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வள பிரதி அமைச்சர் சரத் குமார குணரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், இலங்கை தேசிய நீர்வாழ உயிரின வளர்ப்பு அதிகார சபையின் தலைவர் ஜயந்த சந்திரசோம, அதன் பணிப்பாளர் திருமதி புஸ்பலதா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரிகள், நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள், கடற்றொழிலாளர்கள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி மக்களின் நிலை நேரில் ஆராய்ந்தார் ரணில்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு சென்ற ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியிலுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனின் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு மக்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இச்சந்திப்பின் போது கடந்த யுத்தகாலத்தில் காணாமல்போன மற்றும் கைதான உறவுகளின் குறிப்பாக காணாமல்போன, கைதான பிள்ளைகளின் பெற்றோர்கள், கணவன் தொடர்பாக மனைவி போன்றோர் தமது பிள்ளைகளை, கணவனை மீட்டுத்தருமாறும் அல்லது விபரங்களை பெற்றுத் தருமாறும் ரணில் விக்கிரம சிங்கவிடம் கோரிக்கையினை முன்வைத்தனர்.

மேலும் இதுவரை மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத பரவிப்பாஞ்சான் கிராம மக்களும் தம்மை சொந்த இடத்தில் மீள்குடியமர்த்துமாறும் கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்பில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர் விக்கிரமபாகு கருணாராட்ண, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பிப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன் மற்றும் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, கரைச்சி பிரதேச சபை உபதலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (கே)

# சாரதியின் அசண்டையீனம்; பயணிகள் அந்தரிப்பு

(திருநெல்வேலி)

கொழும்பு - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்ட குளிரூட்டப்பட்ட தனியார் பேருந்து சாரதியொருவரின் அசண்டையீனத்தால் அப் பேருந்தில் பயணம் செய்த பல பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. இது பற்றித்தெரிய வருவதாவது,

இரவு 8.30 மணிக்கு வெள்ளவத்தையில் இருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த இப்பேருந்து, குறிப்பிட்ட இடத்துக்கு நேரம் கடந்தும் வரவில்லை. சிறிது நேரத்தில் வான் ஒன்று வந்து பயணிகளை ஏற்றிச்சென்று குறிப்பிட்ட பேருந்தில் பம்பலப்பிட்டிப் பகுதியில் ஏற்றிய பின்னர் பேருந்து இரவு 9.00 மணிக்குப் பின்பே புறப்பட்டது.

திடீரென்று அகால வேளையில் அநுராதபுரத்துக்கும் புத்தளத்துக்கும் இடைப்பட்ட பொலிஸ் நிலையம் ஒன்றுக்கு முன்னால் இப்பேருந்து நிறுத்தப்பட்டது. இடை வழியில் பொலிஸார் மறித்தபோது சாரதி இப்பேருந்தினை நிறுத்தாமல் வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. பொலிஸார் மறித்ததைத் தான் காணவில்லை என சாரதி கூறியதினால் ஒருவாறு சமாதானம் செய்யப்பட்டு மீண்டும் புறப்படுவதற்கு சாரதி பேருந்தை எடுத்தபோது பின்பக்கமாகக் காணப்பட்ட கம்பம் ஒன்றினை இப்பேருந்து இடித்து விழுத்தியது.

இது பற்றி விசாரிப்பதற்காக சாரதியைப் பொலிஸார் தேடியபோது சாரதியைக் காணவில்லை. பயத்தினால் சாரதி பேருந்தை விட்டு இறங்கி எங்கோ ஓடிவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் சுமார் மூன்று மணித்தியாலங்கள் அந்த இடத்தில் பயணிகள் அவலத்துக்குள்ளானார்கள்.அதன்பின்பு பலரது முயற்சியின் பின்னர் சாரதி வெளிப்பட்டார். சாரதியை பொலிஸார் எச்சரிக்கைசெய்த பின்னர் பேருந்தை எடுத்துச் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டார். இடித்து விழுத்தப்பட்ட கம்பத்தைப் பயணிகளே பின்னர் தூக்கி நிறுத்திவிட்டனர்.

இதனால் மறுநாள் காலை 8.30 மணிக்கே பேருந்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. இடையில் பேருந்தின் ரயர் ஒன்றும் வெடித்ததினால் அதிலும் சில மணி நேரம் கழிந்தது.

அவசர அலுவல்களாகப் பேருந்தில் வந்தவர்களும் அலுவலகங்களுக்குப் போக வேண்டியவர்களும் இத்தாமதத்தினால் பெரும் இன்னல்களுக்குள்ளாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (137)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

வவுனியாவில் இயங்கிவரும் சர்வதேச DMI நிறுவனத்தில் புதிதாக வடக்கு - கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளுக்கு பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. பயிற்சியுடன் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். பயிற்சியின் போது 10,000 ரூபா தொடக்கம் 12,000 ரூபா வரையும், பயிற்சியின் பின் 35,000 ரூபா ஆரம்ப சம்பளத்துடன் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம். ஆகக்குறைந்த கல்வித்தகைமை கல்விப் பொதுத்தராதர சாதாரண தகைமை ஆகும். வயதெல்லை 18 இல் இருந்து 30 வரை. முதல்வரும் 25 நபர்களுக்கு மட்டும் தங்குமிடவசதியும் உணவு வசதியும் இலவசம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே.இல. 077 412 2203, 024 790 0171.

---

இலங்கையின் பிரபல தொலைத் தொடர்பாடல் நிறுவனம் ஒன்றிற்கு வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை மேம்படுத்தல் அதிகாரி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை அலுவலக நாட்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும். மேலதிக தொடர்புகளுக்கு: 077 226 4756.

---

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கதிர்காமம் இந்த யாத்திரிகர் விடுதி உதவிப் பொறுப்பாளர் பதவிக்கு இலங்கைப்பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச்மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கவும். மேலதிக விபரங்களுக்கு இந்து சமய கலாசார அலவல்கள் திணைக்களம் அல்லது 011 255 4975, 011 255 2641 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

40 வயதுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள இலகுரக வாகன சாரதிதேவை. அனுபவமுள்ளோர் மல்ரி பாக்சென்ரர், இல. 61, சேர். பொன்.இராமநாதன் வீதி, கலட்டி எனும் முகவரிக்கு சுயவிபரங்களுடன் இன்று திங்கட்கிழமை நேரில் வரவும். மேலதிக விபரங்களுக்கு: 021 791 2783.

---

கொழும்பிலும், கட்டுநாயக்காவிலும் உள்ள பிரபலமான கம்பனி ஒன்றுக்கு 18 தொடக்கம் 55 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் துப்புரவாக்கல் பணிகளுக்குத் தேவைப் படுகின்றனர். கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் இதர நன்மைகள், தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படுவதுடன், சீருடையும் வழங்கப்படும். ஆர்வமுடையோர் கிராம சேவகரின் நற்சான்றிதழ், பொலிஸ் வதிவிட சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் நேரில் வரவும். தொடர்புகளுக்கு: குளோபில்ரெக் சேர்விஸ் (PVT) லிமிட்டெட், யாழ் கிளை, இல. 320A, பிரதான வீதி, யாழ்ப்பாணம், தொ. பே. இல. 077 210 6044.

---

கடைக் கணக்கு எழுதுநர், கட்டடப் பொருள் விற்பனையாளர், காசாளர், கணக்குகளை ஓடிற் செய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 078 783 5859, 021 222 7304.

---

தெல்லிப்பளைச் சந்தியில் புதிதாகத் திறக்கப்பட்ட மருந்தகத்திற்கு (Pharmacy) வேலையாட்கள் தேவை. தொடர்புகளுக்கு: 077 059 4789.

---

வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு: 075 498 5400, 021 791 2997.

---

முன்னணி நிலையில் உள்ள கைத்தொலைபேசி நிறுவனமொன்றுக்கு விற்பனைப்பிரதிநிதிதேவை. தொடர்புகளுக்கு: 077 257 2026.

---


ஒரு சிறிய குடும்பத்திற்கு சமையல் உட்பட சகலபணிகளையும் முழுநேரமாக தங்கி, பணி புரியக்கூடிய பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. தொடர்புகளுக்கு: 077 516 7472, 021 222 8125.

---

வவுனியாவில் உள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு ஆங்கிலத்தில் கடிதங்கள் சுயமாக எழுதக்கூடியவரும், கணனியில் கடிதங்கள் தட்டச்சு செய்யக் கூடியவரும், தமிழில் மொழி பெயர்ப்பு செய்யக் கூடியவரும், ஆங்கிலம் கதைக்கக் கூடியவரும் தேவை. ஆர்வமுடையோர் தாம் எதிர்பார்க்கும் சம்பளம், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயவிபத்தை அனுப்பவும். தேவைப்படின் தங்குமிட வசதிசெய்து தரப்படும். தொடர்பு: V-356, C/O வீரகேசரி, த.பெ.இல 160, கொழும்பு.

# வட-கிழக்கில் இடைக்கால நிர்வாக அலகு; ஐ.நா.கண்காணிப்பும் அதில் வேண்டும்

## — கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை —



(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் ஐ.நா.வின் கண்காணிப்பில் இடைக்கால நிர்வாக அலகு ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என்று தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த இடைக்கால நிர்வாக அலகு ஐக்கிய நாடுகள் அமைப்பின் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக அலகு நாட்டின் அரசியல் அமைப்பிற்கு புறம்பான வகையில் அமைய வேண்டும்.

அரசியல் அமைப்பின் அடிப்படையில் ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்க இடமளிக்கப் படக் கூடாது.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக அலகு குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

# மருந்து இறக்குமதிக்கு புதிய கொள்கை

(கொழும்பு)

Ministry of Health
Sri Lanka

நாட்டில் ஏற்படுகின்ற மருந்துத தட்டுப்பாடுகளை தவிர்க்கும் பொருட்டு, வெளிநாட்டு அரசாங்கங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் கொள்கை ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது மருந்துப் பொருட்களை விநியோகம் செய்யும் வெளிநாட்டு நிறுவனத்தின் ஊடாக மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

எனினும் சில சந்தர்ப்பங்களில் இந்த நிறுவனத்தின் தாமதத்தினால், பல வைத்தியசாலைகளில் தற்காலிக மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

இந்த நிலையிலேயே வெளிநாட்டு அரசாங்கங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு மருந்துகளை இறக்குமதி செய்துகொள்ளும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# குச்சவெளி கடலில் இளைஞர் மரணம்

(திருகோணமலை)

நிலாவெளி கடற்பரப்பின் குச்சவெளி பகுதியில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த அனர்த்தம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பேராதனைப் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் நேற்றைய தினம் நடைபெற்றது.

# பரமர் சங்கமம்



'மாட்டுக்கு மாடு சொன்னாக் கேளாது சலங்கை கட்டின மாடுதான் சொல்ல வேணும்' இந்த வாக்கியத்துக்கு ஒப்ப நாட்டில நூற்றுக்குத்தொண்ணூறு வீதமான மாந்தரும் நடந்து வருவது கண்கூடு.

இது சாதாரண மனிதரில் இருந்து படிப்படியாக அந்தஸ்து உயர்ந்து கொண்டு போகும் சகல மட்டங்களிலும் இடம்பெற்று வருகிறது.

இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினையை அவர்களுக்கான தீர்வை வழங்கும்படி எம்மால் ஜனநாயக அடிப்படையில் வாக்குச் சீட்டுகள் மூலமாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சொல்வதை அல்லது கேட்பதை அறுபது வருசங்களுக்கு மேலாக மாறி, மாறி ஆட்சிபீடம் ஏறிய எந்த அரசும் இதுவரை சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

'கொடாக்கண்டன் விடாக்கண்டன' எண்ட நிலை உள்நாட்டு ராஜதந்திரிகள் மட்டத்தில் அல்லாமலும் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மட்டத்திலும் முள்ளி வாய்க்கால் வீழ்ச்சிக்குப் பின்பாகவும் நிண்டு கொண்டே இருப்பதை அனுபவித்துக் கொண்டுதானை இருக்கிறம்.

கடந்த 5 ஆம் திகதி மாலை வீட்டுக்குப்போக ஆஸ்பத்திரி வீதியில் வேம்படிச் சந்தியென அழைக்கப்படுகின்ற முதலாம் குறுக்கு வீதி ஆரம்பிக்கும் சந்தியை சைக்கிளில் நெருங்கிக் கொண்டிருந்தேன்.

பின்னால் ஒரு சத்தம் கேட்டுது திரும்பிப் பாத்தன். ஒருவர் சைக்கிளால் வீழ்ந்து எழும்பிக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் என்னுடைய சைக்கிளின் பின்புறம் லேசான ஊராய் வேற்பட்டதும் மூளைக்கு எட்டியது.

சைக்கிளை நிறுத்தி இறங்கி விழுந்தவரை நோக்கி பின் நகர்ந்தேன். "என்னண்டு சைக்கிள் ஓடுறாய் பாத்தோடுறேல்லயோ" எண்டு என்னில் பாய்ந்தார்.

"பின்பாக வந்த நீயெல்லோ முன்னால போற வாகனத்தைப் பாத்து வரவேணு" மெண்டு நியாயத்தைச் சொன்னன். எனக்கு அடிக்கக் கையை ஓங்கினார்.

முஷ்டியை திரட்டி முகத்தில் குத்துவிட முனைந்த என்னுடைய கையை அடக்கிக்கொண்டன். இதுகளைக் கவனிச்ச பொலிஸ்காரர் வந்து இருவரையும் பேசிப் போட்டு என்னைப் போகும்படி கூறினார்.

ஆஸ்பத்திரி வீதியில் போய்க் கொண்டிருந்த என்னை அணுகிய அந்த நபர் மீண்டும் என்னோடை ராத்திக்கொண்டே வந்தார்.

கைதொலைபேசியில் கவனத்துடன் வந்து என்னுடன் முட்டி வீழ்ந்த தன்னுடைய தவறை உணர்ந்து கொள்ளாமல் மற்றொரு தடவையும் கைத்தொலைபேசியை தவற விட்டு எடுத்துக் கொண்ட அந்நபர் எனக்கு மகனைப் போன்ற வயதுடையவராக இருப்பார்.

'மாட்டுக்கு மாடு சொன்னக் கேளாது சலங்கை கட்டிய மாடு சொன்னாத்தான் கேட்குமெண்டது போல் பொலிஸ்காரர் தலையிட்டு தவிர்த்து விட்ட பின்பும். கேளாத அந்த மாட்டுக்கு நல்ல சூடு போடலா மெண்டு அந்த வீதியில் அமைந்துள்ள நண்பருடைய கடை முன்பாக சைக்கிளை விட்டு இறங்கினேன்.

அதுவரை என்னுடன் அலட்டிக் கொண்டே வந்தவர், தரிக்காமல் பாத்துப் பாத்துப் போய்க் கொண்டே இருந்தார். இப்படி எத்தனை பேர் தன்னுடைய தவறுகளை மற்றவர்களுடைய தலையில் 'கட்டி விடத் திரியிறார்கள் சொல்லுங்க பப்பம்...

# ஐ.நா.கண்காணிப்புக் குழுவுக்கு நாட்டுக்குள் அனுமதி இல்லை

## அடம்பிடிக்கிறது அரசு



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பை சட்ட ரீதியான இயக்கமாக மாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முயற்சித்து வருவதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையானது புலிகளுக்கு சார்பாக அமைந்துள்ளது. விடுதலைப் புலி போராளிகளுக்கு அஞ்சலி செலுத்த இடமளிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் புலிகளை சட்ட ரீதியாக்க நவநீதம்பிள்ளை முயற்சித்துள்ளார். இந்த அறிக்கையானது நாட்டின் தேசியப் பாதுகாப்பு விவகாரத்தில் தலையீடு செய்தலாகும். இந்த அறிக்கையின் 63-3 பிரிவில் படையினருக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு சுமத்தி படையினரை சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

போர் தொடர்பில் விசாரணை செய்யும் நோக்கில் வரும் எந்தவொரு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதியையும் நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதேவேளை எந்தக் கண்டனங்களையும் இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொள்வதில்லை என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், இறுதியாக சண்டே லீடர் பத்திரிகையாளர் ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு உள்ளானமை குறித்து இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது வாடிக்கையான விடயமாக மாறிவிட்டது. இதற்காக நாள்தோறும் சர்வதேசத்தினால் கண்டனங்கள் வெளியிடப்படுகின்றன. எனினும் அதனை இலங்கை அரசாங்கம் கண்டுக்கொள்வதாகத் தெரியவில்லை. இலங் கையில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பல்வேறு அமைப்புக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

எனினும் இலங்கை அரசாங்கம் அதனை உரியமுறையில் நிறைவேற்றவில்லை. எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் மனித உரிமைகள் அமர்வு இடம்பெறவுள்ள நிலையில், இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை அதிர்ச்சியளித்துள்ளதாக நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு இலங்கை அரசாங்கம் பிரத்தியேக பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை இலங்கையில் ஊடகவியலாளர்களின் நிலைமை குறித்து விரைவில் தாம் ஒரு விசேட சந்திப்பை ஏற்பாடு செய்யப் போவதாகவும் நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் சண்டேலீடர் பத்திரிகையாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

# ரஷ்யா முதலீடு

ஒன்பது சுற்றுலா விடுதிகளை அமைக்க ரஷ்யா உறுதியளித்துள்ளது. ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் அலெக்சாந்தர் கார்ச்சவா - பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவைச் சந்தித்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம், வடக்கு - கிழக்கு, மலையகம், மேல் மாகாணம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் இந்த சுற்றுலா விடுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. வளர்ச்சியடைந்துவரும் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு இந்த விடுதிகளின் நிர்மாணம் பாரிய பங்களிப்பு நல்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மின்சாரத் தடை பற்றிய தகவல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதால், பின்வரும் நாட்களில் காலை 8 மணிமுதல் 6 மணிவரை மின் விநியோகம் தடைப்படும். இதன்படி நாளை காலை செவ்வாய்க் கிழமை குஞ்சர் கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, வூல்லி புரம் பிரதேசம், அம்பன், ஆனைக்கோட்டை, காக்கைதீவு, அட்டகிரி, சாவற்கட்டு, வராகி அம்மன் கோவிலடி, ஆனைக்கோட்டை - குளப்பிட்டி வீதி ஆகிய இடங்களிலும்,

நாளைமறுதினம் புதன் கிழமை நெல்லண்டை, மாதனை, மாலுச்சந்தி முதல் இரும்பு மதவடி - மடத்தடி வரையான பிரதேசம், மாவடி, சித்தங்கேணி, மாவடி- மூளாய் வீதி, டச்சு வீதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

21ஆம் திகதி வியாழக் கிழமை குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு, அட்டகிரி, சாவற்கட்டு, வராகி அம்மன் கோவிலடி, ஆனைக் கோட்டை- குளப்பிட்டி வீதி ஆகிய இடங்களிலும், 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலுசந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம், மாவடி, சித்தங்கேணி, மாவடி-மூளாய் வீதி, டச்சு வீதி ஆகிய இடங்களிலும் மின் விநி யோகம் தடைப்படும் என யாழ். பிரதேச மின்பொறியலாளர் அறிவித்துள்ளார்.

42). லதா லீலாவின் சகோதரி, லீலா ஜெயந்தியின் மகள். பாபு லீலாவின் தந்தை. லதா பாபுவிற்கு என்ன உறவு முறை?
1) மகள் 2) மருமகள் 3) சகோதரி 4) மகன்

43) ஒரு பாதையில் 10 மின்கம்பங்கள் இருந்தன. அடுத்துவரும் இரு மின்கம்பங்களுக்கு இடையிலான தூரம் 15m எனில், முதல் மின் கம்பத்திற்கும், இறுதிக் கம்பத்திற்கும் இடையிலான மொத்தத் தூரம் எவ்வளவு?
1) 150 m 2) 135 m 3) 125 m 4) 165 m

44). பசி : உணவு எனின், நோய் :.......................................
1) வைத்தியர் 2) மருந்து 3) ஓய்வு

45) கப்பல் : மாலுமி எனின், வாகனம் :...................................
1) நடத்துனர் 2) சாரதி 3) பிரயாணி

46) கனவுரு : தீப்பெட்டி எனின், தாயக்கட்டை ......................................
1) சதுரம் 2) கூம்பகம் 3) சதுரமுகி

47) நிறை : கிலோகிராம் எனின், தூரம் :...........................
1) மெற்றிக்தொன் 2) கிலோமீற்றர் 3) தொன்

48) திசையறி கருவி : விமானி எனின், வியாபாரி :...........................
1) கதிமதனி 2) அளவுச்சாடி 3) தராசு

**பின்வரும் ஆங்கிலப் பதங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை இணைக்கவும்.**

| | |
|---|---|
| 49). Good Moring | நேர்முகப் பரீட்சைகளின்போது |
| 50) Happy Birthday | புதுவருடப் பிறப்பின்போது |
| 51). Good Luck | காலை வேளையில் |
| 52) Happy New year | பிறந்தநாள் நினைவூட்டலின்போது |

**ஒரு சொல் வித்தியாசமானது. அதன் கீழ்க் கோடிடுக.**

53) அடைதல் , ஓடுதல் , வருதல்
54) கொடுத்தல் , பெறல் , விருத்தி
55) கூறுதல் , பாடுதல் , பேசுதல்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

56) சகல மனிதர்களுக்கும் நீர் அவசியம். எனினும் நகர வாசிகள் கிணற்று நீரை அருந்த மாட்டார்கள்.
1. நகர வாசிகள் நீரை அருந்தமாட்டார்கள்
2. நகர வாசிகளுக்கு கிணற்று நீர் கிடைக்காது
3. நகர வாசிகள் கிணற்று நீரை அறியமாட்டார்கள்

57) பழச்சாறு போத்தல் ஒன்றில் 750 ml பானம் உள்ளது. விருந்துபசாரம் ஒன்றில் அவ்வாறான 10 போத்தல்கள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மொத்த பானத்தின் அளவு.



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 38



S.T.திலக்

1) பெற்றோல் நிரப்பும் நிலையங்களில் அவதானிக்கக்கூடிய குறியீடு எது?




1) 2) 3) 4)

2) நாய் கடித்தால் முதலில் என்ன செய்யவேண்டும்?
1) கடித்த இடத்தில் துணியினால் கட்ட வேண்டும்.
2) கடித்த இடத்தை சவர்க்காரத்தினாலும் தூயநீரினாலும் கழுவுதல்.
3) கடித்த இடத்தில் கைமருந்தை பூசுதல்.
4) நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு செல்லல்.

3) எதிரேயுள்ள இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கும் பொதி எது?



1) சீமெந்து 2) தீப்பெட்டி 3) கண்ணாடி 4) பால்மா

4) இலங்கையில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு அபாயத்திற்கு உட்படும் மாவட்டம் எது?
1) அநுராதபுரம் 2) மன்னார் 3) இரத்தினபுரி 4) மாத்தறை

5) மஞ்சள் நிற பின்னணியில் காணப்படும், வீதிச்சமிக்ஞை எதனைக் குறிக்கின்றது?



1) பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை முன்னால்
2) பின்னால் பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை உள்ளது.
3) வீதி எதிரே மூடப்பட்டுள்ளது.
4) படலையுடன் கூடிய புகையிரதக் கடவை முன்னால்

6) இறைச்சி சமைக்கும்போது, இறைச்சியை மென்மையாக்கப் பயன்படுத்துவது எது?
1) பப்பாசிக்காய் 2) இறம்பை 3) கராம்பு 4) கறுவா

7) எமது நாட்டின் பண்டைக்காலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது எது?
1) திரிபீடகம் 2) உபநிடதம் 3) ஆரியவம்சம் 4) மகாவம்சம்

8) இலங்கை அரச இலட்சினையில் காணப்படாதது எது?
1) நெற்கதிர் 2) அரசமரம் 3) நிறைகலசம்

9) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படுவது எது?
1) ஆள் அடையாள அட்டை 2) தபால் அடையாள அட்டை
3) அங்கத்துவ அடையாள அட்டை


10). பால்மாப் பைக்கற் ஒன்றை வாங்கும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் எது?
1) பால்மாவின் விலை 2) காலாவதியாகும் திகதி 3) பைக்கற்றின் தடிப்பு


11) தனது குட்டியை வாயினால் கழுத்துப் பகுதியில் கௌவிச் செல்லும் பிராணி எது?
1) ஆடு 2) மாடு 3) நாய்

12) மரக்கிளைகளில் தலைகீழாகத் தொங்கியபடி நித்திரை செய்வது எது?
1) ஆந்தை 2) வௌவால் 3) குயில்

**பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக**

திப்பிலி / கடுக்காய் / முள்முருங்கை/ வசம்பு / நன்னாரி


13) ......................



14) ......................



15) ......................


16) ......................

**பின்வரும் அலங்காரங்களின் பெயர்களை எழுதுக.**


அரும்பு / நீரலை/ ஈரிதழ் / தனியிழை / கல்பிந்து

17) 
......................................

18) 
......................................


**ஒரு பூரணமற்ற சிட்டை கீழே தரப்பட்டுள்ளது. அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.**


| | பொருள் | அளவு | விலை | வாங்கிய அளவு | தொகை |
|---|---|---|---|---|---|
| 19) | குளிர்பானம் | 1 போத்தல் | ரூபா 98.00 | ............... | ரூபா 294.00 |
| 20) | ரிபன் | 1 | ரூபா 15.00 | 4m | ............... |
| 21) | பிஸ்கட் | 100g | ரூபா 40.00 | ............... | ரூபா 120.00 |
| 22) | பேனை . | 1 | ............... | 3 | ரூபா 45.00 |
| 23) | வெள்ளைத்தாள் | 1 | ரூபா 2.00 | 10 | ............... |

24) 
படத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொன்றும் 5 cm ஆரையுள்ள வட்டங்களாகும். செவ்வகம் ABCD யின் சுற்றளவு யாது?


25) வானொலிப் பெட்டி ஒன்றின் விலை ரூபா 2800 ஆகும். தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றின் விலை அதன் 6 மடங்காகும். தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் வானொலிப் பெட்டி ஒன்றையும் விலைக்கு வாங்குவதற்கான மொத்தப் பணத்தொகை யாது? (......................................)



26) A பெட்டியினுள் B பெட்டிகள் எத்தனையை அடுக்கலாம்?

......................................................

27) இவ்வுருவை மடித்துச் செய்யக்கூடிய திண்மம் யாது?

......................................................

28) 21 : 10 மணித்தியாலம் என்பதை சாதாரண நேரத்தில் தருக.
......................................................

29) சுற்றளவு யாது?

......................................................

30) இலங்கையிலுள்ள நிர்வாக மாவட்டங்கள் .......................................... ஆகும்.

31) இலங்கையின் நாடாளுமன்றத்தைச் சுற்றி .......................................... எனும் நதி ஓடுகிறது.

32) .......................................... என்பவரே உலகப் படத்தை முதன் முதலில் வரைந்தவராவார்.

33) சுற்றி ஒளி வட்டம் உள்ள கோள் .......................................... ஆகும்.

34) விண்வெளிக்கு முதன்முதலில் அனுப்பிய செய்மதியின் பெயர் .......................................... ஆகும்.

35) கார் ஒன்று 5 லீற்றர் பெற்றோலில் 45 km தூரம் பயணம் செய்யும் எனின் 180 km தூரம் பயணம் செய்யக் காரில் நிரப்பப்பட வேண்டிய பெற்றோலின் அளவு யாது? ..........................................


36) 1 kg பருப்பின் விலை 68.00 ஆகும். 2 kg 750 g பருப்பினை வாங்கச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு? (..........................................)

37) அதிகளவு நீர் தேவையான தாவரம் எது?
1. நெல் 2. பனை 3. நிலக்கடலை

38) தரப்பட்ட தாவரங்களில் ஆணிவேர் அற்ற தாவரம் எது?
1) புளி 2) மா 3) தென்னை

39) நீரில் மிதக்கக் கூடிய ஓர்பொருள் பின்வருவனவற்றுள் எது?
1) றெஜிபோம் 2) பனிக்கட்டி 3) மேற்சொன்ன இரண்டும்


40) பின்வரும் உருக்கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




41). தரம் 4 கணிதப் புத்தகத்தை விரிக்கும்போது இடது கைப்பக்கம் 104 ஆக இருந்தது. அடுத்த பக்கத்தை விரிக்கும்போது வலது கைப்பக்கம் இருக்கும் பக்க எண் எது?
1) 105 2) 106 3) 107 4) 110

# ஈழப்பிரச்சினை தொடர்பில் ஜெயலலிதா நாடகமாடுவதாக கருணாநிதி குற்றச்சாட்டு





ஈழப் பிரச்சினையில் முதல்வர் ஜெயலலிதா நாடகமாடுவதாக தி.மு.க தலைவர் கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில், கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.நா.வின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது. அப்போது அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக, மத்திய அரசு வாக்களிக்க வேண்டுமென்று பிரதமரிடம், தான்(முதல்வர் ஜெயலலிதா) வலியுறுத்தியதாகவும், முதலில் அதை ஆதரிப்பது பற்றி எதுவும் தெரிவிக்காத இந்திய அரசாங்கம், தனது தொடர் வலியுறுத்தலால் ஆதரித்தது என்று பேரவையில் முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஆனால் இதே முதல்வர் தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பேரவையில் வலியுறுத்தினார். அதைப்போல 17.1.2009 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை இராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என்றும் குறிப்பிட்டார்.

## கிறிஸ்தவ நற்சிந்தனை

# தூய்மை என்பது என்ன?

"தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்..." என்ற கூற்று கடவுளின் தூய்மையை வாழ்ந்துகாட்ட நம்மை அழைக்கின்றது.

தூய்மை என்பது என்ன, எமது தலையைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் காணப்படுவதா அது? அல்லது ஒழுங்காக ஆலயத்திற்குப் போகும், திருமறையை வாசிக்கும், செபிக்கும் நபர் என்று அர்த்தமா? தூய்மை என்பது அதிலும் மேலானது. தூய்மை என்பது நமது வாழ்க்கை முறை, தூய்மை என்பது நமது உறவு முறை, தூய்மை என்பது பிறரை எவ்வாறு மதிக்கின்றோம் என்பதைப் பொறுத்தது.

ஏழைகளையும், அன்னியர்களையும், புறக்கணிக்கும் வாழ்வுப்பாங்கா எங்கள் வாழ்வு? மீள் பார்வை செய்து பார்ப்போம்.


தூய்மை என்பது வானத்தில் மிதப்பது அல்ல, நம் கால் பூமியில் பதிந்திருக்க வேண்டும். தூய்மை என்பது நீதி, நேர்மை, இரக்கம். நாம் பணக்காரப் பெரும்புள்ளிகளை எப்படி நடத்துகின்றோம்? அதேவேளை ஏழைகளை எப்படி நடத்துகின்றோம்? என்பதைப் பொறுத்ததே தூய்மை.

இறைவன் ஆள்பார்த்து அருள் கொடுப்பவர் அல்ல. மாறாக அனைவருக்கும் அருள் கொடுப்பவர். அதனைப் போல நாமும் செயற்படுவோம்.

-வி.பி.தனேந்திரா.

இந்தியச் செய்திகள்

# கூடங்குளத்தில் அணுக்கசிவு; வதந்தியால் பெரும் பரபரப்பு




கூடங்குளம் அணு உலையில் கசிவு ஏற்பட்டதாக பரவிய வதந்தியால் நெல்லை, குமரி மாவட்டங்களை சேர்ந்த கடலோர கிராம மக்கள் இரவு முழுவதும் தூங்காமல் தவித்தனர். நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலைய பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அணு உலையில் எரிபொருள் நிரப்பப்பட்டு மின் உற்பத்தியை தொடங்க தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

அணு உலைக்கு எதிராக கூட்டப் புளி, பெருமணல், இடிந்தகரை, தோமை யார்புரம், கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை, பெரியதாழை உள்ளிட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த மக்கள் போராடி வருகின்றனர். இதனால் அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அணு உலையில் நேற்றுமுன் தினமிரவு கசிவு ஏற்பட்டதாகவும், அதில் இருந்து கதிர்வீச்சு பரவும் அபாயம் உள்ளதாகவும் குமரி மாவட்ட கடலோர கிராமங்களில் திடீர் வதந்தி பரவியது. இடிந்தகரையிலும் இது காட்டு தீ போல் பரவியது. இதைத் தொடர்ந்து நள்ளிரவில் இடிந்தகரையில் உள்ள லூர்து மாதா ஆலயத்தில் மணி அடிக்கப்பட்டது.

பதற்றம் அடைந்த மக்கள் அங்குள்ள உண்ணாவிரத பந்தலில் திரண்டனர். இந்த தகவல் கூடங்குளம், வைரவிகிணறு, கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை, பெருமணல், தோமஸ் மண்டபம் உள்ளிட்ட கடலோர கிராமங்களுக்கும் பரவியது. இதனால் பீதியடைந்த மக்கள் தூங்காமல் விடிய விடிய விழித்திருந்தனர். பல மணிநேரத்துக்கு பிறகே இது வதந்தி என்பது தெரிய வந்தது. எனினும் நெல்லை, குமரி மாவட்ட கடலோர கிராமங்களில் தொடர்ந்து பதற்றமும், பரபரப்பும் நிலவுகிறது.

# ஏழு செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவுகிறது இஸ்ரோ



ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரி கோத்தாவில் அமைந்துள்ள இஸ்ரோ விண்வெளித் தளத்திலிருந்து எதிர்வரும் 25 ஆம் திகதி பல்வேறு நாடுகளின் 7 செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்படுகின்றன.

பி.எஸ்.எல்.வி- 20 என்ற செயற்கைக் கோள் செலுத்தும் ரொக் கெட்டின் .வழியாக 7 செயற்கைக் கோள்களும் விண்ணில் ஏவப்பட உள்ளன.

இதில் இந்தோ - பிரெஞ்ச் கூட்டமைப்புடன் உருவாகியுள்ள சரல் என்ற செயற்கைக் கோளும் அடங்குகின்றது.

உலக நாடுகளின் செயற்கைக் கோள்களை ஏவுவதன் மூலம் இந்திய விண்வெளித் துறைக்கு அதிக வருவாய் கிடைக்கும். இதனால் இந்திய விண்வெளித் துறையின் ஆராய்ச்சிகள் மேலும் அதிகரிக்கும் என்றும் இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.


# அன்னதானம் வழங்குவதில் ஆர்வம் காட்டும் அனுஷ்கா



வெளிவந்த அலெக்ஸ் பாண்டியன் படத்தில் நாயகியாக நடித்த அனுஷ்கா ஆன்மீகத்தில் அதிக ஆர்வத்துடன் காணப்படுகிறார். படப்பிடிப்பு இல்லாத நாட்களைக் குறித்து வைத்துக் கொண்டு ஆந்திராவில் உள்ள முக்கிய ஸ்தலங்களுக்கு சென்று சுவாமி தரிசனங்களை நடத்தி வருகிறார்.

இதுமட்டுமின்றி தனது சார்பில், அங்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானங்களையும் வாரி வழங்குகிறார். எதற்காக இந்த திடீர் அன்னதானம் என்று அனுஷ்கா தரப்பை விசாரித்த போது, சமீபத்தில் அவரது ஜாதகத்தைப் பார்த்த குடும்ப ஜோதிடர், சில கிரகங்கள் சாதகமாக இலலாமல் எதிர்மறையான வேலைகள் செய்து வருவதாக தெரிவித்தாராம். அந்த எதிர்வினைகள் பெரிய அளவில் தாக்காமல் தவிர்க்க, ஆன்மீக ஸ்தலங்களுக்கு சென்று அன்னதானங்கள் மற்றும் பரிகாரங்களை செய்து வந்தால் தலைக்கு வரும் ஆபத்து தலைப்பாகையோடு போய் விடும் என்று ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அதற்கேற்ப அனுஷ்கா கடைசியாக நடித்த தாண்டவம், அலெக்ஸ் பாண்டியன் போன்ற படங்களும் தோல்வி அடைந்ததால் ஜோதிடர் சொன்னது உண்மைதான் என்று கோயில் கோயிலாக வலம் வருகிறார்.



சென்னையில் 65 ஜோடிகளுக்கு திருமணத்தை அ.தி.மு. க. பொதுச் செயலரும் முதல்வருமான ஜெயலலிதா நடத்தி வைத்தார். அப்போது கட்சி நிர்வாகி ஒருவர் வீரவாளினை பரிசாக வழங்கினார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

சமகால தமிழ் சினிமா....

(12ஆம் பக்கத்தொடர்ச்சி...)

சோகமான ஒன்று. சமூகப் பிரச்சினையைப் பற்றி பேசுவதான பாவனையில் வழக்கமான காதல் படமாகவே 'நீர்ப் பறவை' அமைந்து போனது.

முதன் முதலாக யானையையும் பாகனையும் பிரதான பாத்திரங்களாக அமைத்து வெளிவந்தது 'கும்கி'. அருமையான வாய்ப்பு. யானைகளுக்கும் பாகன்களுக்குமான உறவு, அதிலுள்ள நுண்தகவல்கள், யானைகளின் வழித்தடங்கள், வாழ்விடங்கள், நீர்நிலைகள் அழிக்கப்படுவதால் அவை ஊருக்குள் நுழைய வேண்டிய நிலை போன்றவற்றை படத்தின் ஊடாக சொல்லியிருக்கலாம். மாறாக, விலங்குகளையும் பறவைகளையும் மனித குலத்திற்கு எதிரானவைகளாக கொடூரமானவைகளாக சித்தரிக்கும் ஹொலிவுட்தனத்தையே 'கும்கி'யும் பின்பற்றியது.

சூப்பர் ஸ்டார்கள், நடிகர்கள், புரட்சி தமிழர்கள், தளபதிகள்... போன்ற ஊதிப்பெருக்கப்பட்ட அதிநாயக பிம்பங்களையே தமிழ் சினிமா நம்பியிருப்பதான மாயையை அடித்து நொறுக்கியது 'நான் ஈ'


2012இன் சிறந்த சினிமாவாக 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' படத்தை முன்வைக்கிறேன். தமிழ் சினிமாவில் காதல் என்கிற சமாச்சாரம் பல ஆண்டுகளாகவே முதிர்ச்சியற்ற தன்மையோடு சலிக்க சலிக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

காதலை ஓர் ஒவ்வாமையாகவே மாற்றி விட்ட தமிழ் சினிமாவில் அதைப் பற்றி பேசாத காரணத்தினாலேயே 'enfhgfh' தனித்து நிற்கிறது.

மெலோட் ராமாவாக கண்ணீர்க் காட்சிகளுடன் சொல்ல வாய்ப்பும் சந்தர்ப்பமும் உள்ள உள்ளடக்கத்தை சிரிக்க சிரிக்கச் சொல்லியிருப்பதுதான் இந்தத் திரைப்படத்தை வித்தியாசப்படுத்துகிறது.

# மீண்டும் அணு ஆயுத சோதனை; கடும் விளைவைச் சந்திக்க நேரிடும்

## – வடகொரியாவை எச்சரிக்கும் அமெரிக்கா



வடகொரியா மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்த முயன்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி மூன்றாவது முறையாக அணு ஆயுத சோதனையை வடகொரியா சமீபத்தில் நடத்தியுள்ளது. இந்நிலையில், மீண்டும் அணு ஆயுத சோதனையை வடகொரியா நடத்தக்கூடும் என்று ஊடகங்களில் செய்தி வெளியானது. இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜோஸ் எர்னெஸ்ட செய்தியாளர்களிடம் கூறியதாவது;

அணு ஆயுத சோதனை நடத்தும் வடகொரியா, சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளது. இந்நிலையில், மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்தினால், அந்நாட்டு மக்கள் தான் பாதிப்படைவார்கள். அணு ஆயுத சோதனைகள் நடத்துவதைக் கைவிட்டு விட்டு, தனது சர்வதேச கடமைகளை உணர்ந்து வடகொரியா செயல்பட வேண்டும் என்றார்.

முன்னதாக வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலண்ட் கூறுகையில், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை வடகொரியா நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், கடும் விளைவுகளை அந்நாடு சந்திக்க வேண்டியிருக்கும். வடகொரியா அணு ஆயுத சோதனை நடத்தினால், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் [illegible]பையின் பாதுகாப்பு கவுன்சிலில் ஏற்கெனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம் என்றார்.

உலகச் செய்திகள்

# சக்திவாய்ந்த குண்டு வெடிப்பு; பாகிஸ்தானில் 79 பேர் பலி



பாகிஸ்தானில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 79 பேர் உயிரிழந்தனர். 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள குவெட்டா நகரில் மக்கள் நடமாட்டம் உள்ள குறிப்பாக, ஷியா பிரிவினர் அதிகமாக உள்ள கிரானி சாலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இந்தக் குண்டு வெடித்தது. படுகாயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பெரும்பாலானவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனத் தெரிகிறது. குண்டு வெடிப்பில் அருகிலுள்ள வீடுகள், கட்டடங்களின் ஜன்னல் கண்ணாடிகள் ஆகியவை பெரிய அளவில் சேதமடைந்தன. மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தச் சம்பவத்துக்கு லஸ்கர்-இ-ஜாங்வி என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

# கவர்ச்சிமிக்க நாட்காட்டி வெளியீடு; விமான நிலையத்திற்கு கண்டனம்



மொடல் அழகிகளை கொண்டு கவர்ச்சியாக தயாரிக்கப்பட்ட நாட்டிகாட்டியை வெளியிட்டதால் பட்ஜட் விமான நிறுவனமொன்று தாய்லாந்து அரசின் கண்டனத்துக்குள்ளகியுள்ளது.

குறைந்த விலையில் பயணிகளை ஏற்றிச்செல்லும் நொக் எயார்லைன் விமான நிறுவனமே இவ்வாறு மொடல் அழகிகளை கொண்ட நாட்காட்டியை வெளியிட்டுள்ளது.

இந்நாட்காட்டியில் 12 மொடல் அழகிகள், குறித்த விமான நிறுவனத்திற்குரிய நிறத்தில் பிகினி ஆடைகளை அணிந்த நிலையில் வெவ்வேறான கோலத்தில் புகைப்படங்களுக்கு காட்சியளித்துள்ளனர். இந்நிலையில் இந்நிறுவனம் கலாசாரத்தை மீறியுள்ளதாக தாய்லாந்து அரசாங்கம் கண்டித்துள்ளது.

சில நிறுவனங்கள் பெண்களின் உடல்களை விளம்பர பொருளாக பயன்படுத்துவதை நிறுத்த மறுப்பதற்கு இது போன்ற நாட்காட்டிகள் சிறந்த உதாரணமாகும் என அரசாங்கம் கூறியுள்ளதாக தாய்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வேலைக்கு ஆட்கள் தேவை; விசா தயாரிக்கிறது அமெரிக்கா




அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்துறைகளில் சிறந்து விளங்குவோருக்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் விசாக்களை உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

பல துறைகளில் சிறந்துவிளங்கும் தொழில் முனைவோருக்கு 75ஆயிரம் விசாக்களையும், அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித பட்டதாரிகளுக்காக 50 ஆயிரம் விசாக்களையும் உருவாக்கும் பொருட்டு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் சட்ட மசோதா கொண்டுவந்துள்ளனர்.

இந்தியா, சீனா உள்ளிட்ட உலகம் முழுவதிலுமுள்ள வல்லுநர்களை ஈர்ப்பதற்காக அமெரிக்க அரசு கொண்டுவரும் இந்தச் சட்ட மசோதாவுக்கு மைக்ரோசொப்ட், கூகிள் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

சாதனை படைத்த தொழில்முனைவோர்கள் அமெரிக்காவுக்கு வந்தால் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வாய்ப்பிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# ‘பிரைட் ரைஸ்’ தயாரித்து சீனர்கள் கின்னஸ் சாதனை

காஸ்டா ரிகாவில் பிரைட் ரைஸ் செய்து கின்னஸ் உலக சாதனையில் இடம்பெற்றுள்ளனர் சீன மக்கள். உலகெங்கிலும் உள்ள சீன மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிறந்த பாம்பு புத்தாண்டை கொண்டாடி வருகின்றனர். இந்த கொண்டாட்டம் 10 நாட்கள் வரை நடக்கும்.

இந்நிலையில் காஸ்டா ரிகாவில் உள்ள சீன மக்கள் பாம்பு புத்தாண்டை கொண்டாட ஒரு புதுமையான வழியை தேர்வு செய்தனர். அவர்கள் 1,345 கிலோ எடையுள்ள பிரைட் ரைஸ் செய்தனர்.



சான் ஜோஸில் புதிதாக திறக்கப்பட்டுள்ள சைனாடவுனில் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு 52 சமையல் கலைஞர்கள் கூடினர். அவர்கள் 735 கிலோ அரிசி, 200 கிலோ கோழிக்கறி, 120 கிலோ பன்றிக் கறி, 20 கிலோ சீன சாசேஜ், முட்டைகள், வெங்காயம் உள்ளிட்டவற்றை ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு பிரைட் ரைஸ் தயாரித்தனர்.

கின்னஸ் உலக சாதன அதிகாரிகள் வந்து பிரைட் ரைஸை எடை போட்டுப் பார்த்தனர். இதுவரை தயாரிக்கப்பட்ட பிரைட் ரைஸில் இங்கு தான் அதிக அளவில் தயார் செய்யப்பட்டதை உறுதி செய்தனர். இதையடுத்து இந்த பிரைட் ரைஸ் தயாரிப்பு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

# ஏலத்திற்கு வருகின்றது நெப்போலியனின் மோதிரம்

மாவீரன் நெப்போலியன் முதல் மனைவி ஜோஸ்பினுக்கு திருமண நிச்சயத்தின்போது அளித்த வைர மோதிரம் அடுத்த மாதம் 24ஆம் திகதி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஏலம் விடப்படுகிறது.

வைரம்பதிக்கப்பட்ட இந்த தங்க மோதிரம் 12,000 யூரோ (இந்திய மதிப்பில் ரூ. 8,66,600) வரை ஏலம் போகும் என்று எதிர்பார்ப்பதாக ஒசெண்டா என்ற ஏல நிறுவனம் கூறியுள்ளது.

நெப்போலியன் பணப் பிரச்சினையில் இருந்தபோது இந்த மோதிரத்தை மனைவிக்கு வழங்கியுள்ளார். அதனால் இது அதிக வேலைப்பாடுகள் இல்லாத சாதாரண வைர மோதிரமாகும்.

அலெக்சாண்டர் டி பியுகர்னைஸ் என்ற செல்வந்தரின் மறைவுக்குப் பின்பு விதவையான ஜோஸ்பினை அவர் திருமணம் செய்து கொண்டார்.

இந்த மோதிரத்தை 1796ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி அவர்களின் நிச்சயதார்த்தத்தின் போது ஜோஸ்பினுக்கு நெப்போலியன் அணிவித்தார். அடுத்த நாள் (மார்ச் 9ஆம் திகதி) அவர்களின் திருமணம் நடந்தது. 1810ஆம் ஆண்டு அவர்கள் இருவரும் பிரிந்தனர்.

ஆனால், நெப்போலியன் இறக்கும் நிமிடம் வரை ஜோஸ்பினை மறக்கவில்லை என்று அவர் இறக்கும்போது உடன் இருந்தவர்கள் கூறியுள்ளனர்.



# ஆளுமைமிக்க பாடசாலையாக யூனியன் கல்லூரி திகழ வேண்டும்

## தெல்லிப்பழை கல்விப் பணிப்பாளர்

(தெல்லிப்பழை)

கல்வியிலும், விளையாட்டிலும் வளர்ச்சி அடைவதன் மூலம் ஆளுமைமிக்க பாடசாலையாக எதிர்காலத்தில் திகழ வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தெல்லிப்பழைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சண்முககுலகுமார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலையின் அதிபர் வே.இரத்தினகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ர.இந்திரராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சிங்கப்பூர் பொருளியல் ஆலோசகரும், கல்லூரியின் பழைய மாணவனுமான பார்த்தீபனும், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கணக்காளர் என்.எஸ்.ஆர். சிவரூபனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மீளக்குடியமர்த்தப்பட்ட இப்பாடசாலையின் குறைந்த வளங்களை சிறப்பாகப் பயன்படுத்தி சிறந்த முறையில் தமது நகர்வை நடத்தி முடித்திருப்பதையிட்டு விருந்தினர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர்.

நிகழ்வின் இறுதியில் நன்றியுரையைக் கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஜெயந்தி ஜெயதரன் நிகழ்த்தினார். (17)

# வல்லிபுர ஆழ்வாரை வழிபட்டார் ரணில்



(பருத்தித்துறை)

யாழ்ப்பாணத்திற்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் ஆலயச் சூழலிலுள்ள பெரியாழ்வார் ஆச்சிரம மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் எஸ்.அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது சட்டத்தரணி எஸ்.விஸ்ணுகாந்தன், பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் க.குலசேகரம், ஆலய மகா சபைத் தலைவர் எஸ்.தேவதாசன் உட்பட பலர் உரையாற்றினர்.

இந்நிகழ்வில், ரணில் விக்கிரமசிங்க பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (01,116)

## தீர்வு தாமதமடைவதற்கு...

தீர்வுத்திட்டத்தை பெற்றுக்கொடுக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் இது தொடர்பில் பல முறை தெரிவித்திருக்கிறேன். சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இணைந்து தமிழ்மக்களுக்கு தேவையானவற்றை முன்வையுங்கள் அதன் மூலமே நல்லதொரு தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளேன்.

தற்போது சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் அரசுடன், சமசமாஜக்கட்சி, புதிய லெனின் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஈ.பி.டி.பி, முஸ்லிம் காங்கிரஸ், என பல கட்சிகள் இருக்கின்றன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணை ந்து கொண்டால் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கொள்ளும் என தெரிவிக்கிறார் ரணில் விக்கிரமசிங்க இது நல்ல ஒரு சந்தர்ப்பம் இதனை பயன்படுத்தி சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இணைந்து தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வுத் திட்டத்தை வழங்க முடியும்.

தற்போதைய அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் காணப்படுவதுடன் ஜனாதிபதியும் ஒரே கட்சியாக காணப்படுவதால் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வைப் பொற்றுக் கொள்ள முடியும் இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நழுவ விடுமானால் மீண்டும் இப்படி ஒரு பெரும்பான்மையுள்ள அரசு அமைய எத்தனை காலம் செல்லுமோ எனக்குத் தெரியாது.

கடந்த முறை அமைக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற தயாராக இருந்தபோதும் தமிழ்த் தேசியக். கூட்டமைப்பு இணைந்து கொள்ளாது இருந்ததால் இது செயலிழந்து போனது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின். 22 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணையை கொண்டுவர முயற்சிப்பதை சாதாரண விடயமாகக் கருத முடியாது. இதன் மூலம் இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு யோசனை முன்வைக்கும் சாத்தியம் உண்டு.

தற்போதைய நிலைமையை புலி ஆதரவு புலம்பெயர் மக்கள் நன்றாக பயன்படுத்திக்கொள்வர். எனவே கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமுல்படுத்துவதாக சர்வதேசத்துக்கு வலியுறுத்திக் கூறுவதே அழுத்தங்களைக் குறைப்பதற்கான ஒரே வழியாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி நாடாளு மன்றத் தெரிவுக்குழுவை கூட்டி அரசியல் தீர்வை விரைந்து காண்பதன் மூலமே இந்தியாவின் ஆதரவை ஜெனிவாவில் பெற முடியும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு புலிகள் கேட்டதைப்போல் தமிழீழம் வேண்டும் என்று கேட்காது தமிழ் மக்களுக்கு தேவையானதையே கேட்க வேண்டும். தமிழ் தேசியக்கூட்டமைப்பு அடிக்கடி தெரிவிப்பது தமிழ் நாடு போன்று தமக்கும் என்று ஒரு இடம் வேண்டும் என்பதுதான் இந்த மனம் மாற்றமடைய வேண்டும் தமிழ் நாடு வேறு. அது ஒரு பெரிய பிரதேசம் இலங்கையே சிறியதொரு பிரதேசம் எனவே ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் நல்லதொரு தீர்வை கேட்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதும் வெளிநாடுகள் தீர்வைப் பெற்றுத்தரும் என எண்ணுகின்றனர். இது மாற்றம் பெற வேண்டும் தற்போது உங்களுடைய கட்சி இரண்டாக காணப்படுவதற்கும் இந்த வெளிநாடுகளே காரணம். தெளிவாக இருங்கள் இலங்கை நான்கு பக்கமும் நீரால் சூழ்ந்த ஒரு பிரதேசம் அதுமட்டுமல்ல இயற்கை வளம் பொருந்திய ஒரு நாடு அதனால் இலங்கை முன்னேறுவதற்கு ஒரு நாடும் விடாது. ஏதோ ஒரு பிரச்சினையை தோற்றுவித்துக் கொண்டு தான் இருக்கும் தமிழ் மக்களுக்கு பிரச்சினை தீர்ந்து விட வெளிநாடுகள் ஒரு போதும் விடப்போவதில்லை எனவே வெளிநாடுகளின் சொல்லுக்கு தலையாட்டாது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்தை பெற்றுக்கொள்ள சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இணைந்து கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல கிராமமட்ட அதிகார பகிர்வுக்கு செல்ல வேண்டும் அப்போதுதான் ஒரு சிறந்தமுறையில் அபிவிருத்தி செய்ய முடியும் எனவே அவற்றை எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இணைந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

இந்நிகழ்வில், புளொட் தலைவர் சித்தார்த்தன், முன்னாள் துணைவேந்தர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பொதுமக்களைப்....

இது ஊடகவியலாளரைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி. எனவே, அவர் உடனடியாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் நான் கலக்கமடைந்துள்ளேன்.

ஏனென்றால், அவர் ஒரு ஊடகவியலாளர். அவர் பொறுப்புக் கூறல், நீதித்துறை விவகாரங்களில் இலங்கை அரசாங்கத்தை விமர்சிக்கும் செய்தித்தாள் ஒன்றில் பணியாற்றுபவர். இந்த விவகாரங்கள் என்னால் கவனிக்கப்படுபவை.

நீதிக்குப் புறம்பான படுகொலைகள், ஆட்கடத்தல்கள், இந்த வகையான நடத்தைகள், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கு உள்ள தடைகள் குறித்து ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக்கு, எனது கரிசனைகள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளேன்.

இந்தச் சம்பவத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் தொடர்புள்ளதா என்று சரியான விசாரணைகளை மேற்கொள்ளாமல் எந்த முடிவுக்கும் வரமுடியாது.

அதேவேளை, அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

பொதுமக்கள் நம்பும்படியான நம்பகமான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றே நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறேன்.

நிபுணத்துவ விசாரணைகளுக்கு அவர்களுக்கு உதவ நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் அவர்கள் அதை ஏற்காதது ஏமாற்றமளிக்கிறது.

இது மோசமானது. ஏனென்றால், அரசாங்கப் படைகள் பொது மக்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டுள்ளனர். பீரங்கித்தாக்கு தல்களை நடத்தியுள்ளனர்.

அரசாங்கத்தின் பொறுப்பு பொதுமக்களைப் பாதுகாப்பதே தவிர கொல்வது அல்ல என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஜெனிவா...

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் இராணுவ நீதிமன்றம் யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம்பெற்ற மனித படுகொலை பற்றி வெளியிட்ட ஆதாரபூர்வமான அறிக்கையையும் சமர்ப்பிப்பதற்கு தூதுக் குழுவினர் தயார்நிலையில் உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து கண்டனம் தெரிவித்து வெளியிட்ட அறிக்கைக்கும் தூதுக் குழுவினர், ஏற்கனவே தமது நிலையை எழுத்து மூலம் அவரது காரியாலயத்திற்கு அறிவித்துள்ளனர்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்று ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை ஒருதலைப்பட்சமான அறிக்கை என்றும் அரசாங்கம் ஏற்கனவே நடைமுறைப்படுத்திய நல்லிணக்க செயற்பாடுகளை இவ்வறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றும் சுட்டிக்காட்டி இலங்கை இவ்வறிக்கையை நிராகரித்துள்ளது. (மற்றுமொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## கைத்தொலைபேசி....

வரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவரின் கையடக்கத் தொலைபேசிக்கு உன்னைக் கொலை செய்வோமெனக் கூறி நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் அழைப்பொன்று வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்நபர் வீட்டிற்கு அருகிலுள்ள இராணுவப் பொலிஸ் காவலரணுக்கு தனது மனைவியுடன் சென்று முறையிட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு இராணுவ பொலிஸ் காவலரணில் இருந்தவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

தொடர்ந்து இருவரும் நெடுங்கேணி பொலிஸில் முறைப்பாடு செய்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

எனினும், நேற்று அதிகாலை இவரது வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாதோர் இவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர். இதனைக் கண்டு கூக்குரலிட்ட அவரது மனைவியின் வாயினுள் சீலையை திணித்துள்ளனர். பின்னர் அவரது சடலத்தை வீட்டிலுள்ள கிணற்றுக்கு அருகில் கொண்டு சென்று போட்டு விட்டு தப்பிச்சென்றுள்ளதாக உறவினர்கள் கூறினர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுவருவதாக நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ரணில்...

கடிகளை அனுபவித்து வந்தார்கள் என்பதனை அனைத்து தரப்பினரும் மறந்து விட்டார்கள் எனஅவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் நண்பரான சார்லி மகேந்திரனின் வீட்டைப் புலிகள் பயன்படுத்தி வந்தார்கள். அந்த வீட்டை இராணுவத்தினர் பின்னர் பயன்படுத்தினார்கள் எனவும். குறித்த பூர்வீக வீட்டை மீட்டுத் தருமாறு ரணில் தம்மிடம் கோரியதாகவும் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தமது பணிப்புரைக்கு அமைய படையின்ர் சார்லி மகேந்திரனின் பூர்வீக வீட்டை விட்டு வெளியேறியதாகவும், இவ்வாறு புலிகள் இல்லாதொழிக்கப்பட்டதன் மூலம் ரணிலும் அவரது சகாக்களும் பல நன்மைகளை அடைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எதிர்க்கட்சியின் ஒரு தரப்பினர் அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதில் தீவிரம் காட்டி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஹலால்முறைமை...

எனவே உலமாக்கள் சபையை தடை செய்ய வேண்டும் என்று அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளுக்கு இலங்கை பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக அனுப்பப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பல பிரச்சினைகளுக்கு முஸ்லிம்களின் உலமா சபைகளே காரணம் என்று கூறிய அந்த அமைப்பின் செயலாளர் ஒருவர், உலமாக்கள் சபையை தடை செய்ய வேண்டும் என்றும் பேசினார்.

முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அங்கு பேசிய பௌத்த பிக்கு ஒருவர் குறிப்பிட்டார்.

## குளத்தில்...

தில் குதித்து நிச்சலடித்த வேளை அவர் நீரில் மூழ்கியதையடுத்து கூடச் சென்ற இளைஞன் அயலிலுள்ளவர்களை கூக்குரலிட்டு அழைத்து அவர்களின் உதவியுடன் இளைஞன் மீட்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்து காணப்பட்டார்.

தகவல் வழங்கப்பட்டதையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், மரண விசாரணைகளுக்காக சடலம் யாழ்.போதனா வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (இ, 05)

# தனியார் போக்குவரத்துச்சேவை

# ஜி.பி.எஸ்.முறை விரைவில் அமுல்

## அரைச்சொகுசு பஸ் சேவையும் நிறுத்தம்

கைத்தொலைபேசிகளில் உரையாடியவாறு பஸ்ஸை செலுத்துதல், வேகக் கட்டுப்பாட்டை மீறல் மற்றும் குறித்த இலக்கை குறித்த நேரத்திற்கு சென்றடையாமை ஆகியவற்றை உடனுக்குடன் கண்டுபிடிக்கும் ஜி.பி. எஸ். முறை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளதாக தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை அரைச்சொகுசு பஸ்களை முற்றாக சேவையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன் மூலம் எதிர்காலத்தில் சாதாரண மற்றும் அதிசொகுசு பஸ்கள் மாத்திரமே சேவையிலீடுபடுத்தப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தூர இடங்களுக்குச் செல்வோர் விரைவில் குறித்த இடத்தை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே அரைசொகுசு மற்றும் அதிசொகுசு பஸ்களை விரும்புகின்றனர். அரைச் சொகுசு எனும் பெயரில் சாதாரண பஸ் விலையிலும் ஒன்றரை மடங்கு பணம் வசூலிக்கும் பஸ் உரிமையாளர்கள் யன்னல்களுக்கு திரைச்சீலைகளை மட்டும் போட்டுவிட்டு சொகுசு என்பதன் அர்த்தத்திற்குரிய எந்தவொரு வசதியையும் பெற்றுக் கொடுப்பதில்லை. இறுதியாக வீதியிலுள்ள தூசி முழுவதும் பஸ் பயணி மீது காணப்படும். பணத்தையும் கொடுத்து பயணிகள் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவது குறித்து எனக்கு நிறைய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பயணிகளின் வசதியே எமக்கு முக்கியம் ஆகையால் இந்த அரைச்சொகுசு பஸ் சேவையை முற்றுமுழுதாக நிறுத்திவிட தீர்மானித்துவிட்டோம் விரைவில் இதன் அனைத்து சேவைகளையும் இரத்துச் செய்வோம்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பொருத்தப்பட்டிருக்கும் இத்தொழில்நுட்பத்தினூடாக நாட்டின் தூர இடங்களுக்குச் செல்லும் அனைத்துப் பஸ்களினதும் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை உடனுக்குடன் கண்டறிய முடியும். தவறு இழைக்கப்படும் பட்சத்தில் குறித்த இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குவதன் மூலம் அவ்விடத்திலேயே தண்டப்பணம் அறவிடுதல் உள்ளிட்ட சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இச்செயற்திட்டம் இன்னும் சில தினங்களுக்குள் அமுல்படுத்தப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் பயணிகள் எதிர்நோக்கும் மிகுதிப் பணம் வழங்காமை பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மார்ச் மாதம் முதல் 'ப்ரீபெயிட் கார்ட்' முறை நடைமுறைக்கு வருமெனவும் அமைச்சர் கூறினார்.

# இலங்கையில் 20 இலட்சம் நாய்கள் 60 வீதமானவை கட்டாக்காலிகள்

இலங்கையில் சுமார் 20 இலட்சம் நாய்கள் உள்ளன. இவற்றில் 60 வீதமானவை கட்டாக்காலி நாய்களாக இருக்கின்றன. இதனால் அதிகளவில் நீர்வெறுப்பு நோய் (விசர்) ஏற்பட வாய்ப்புள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் விசர் நாய்க்கடியினால் ஏற்படும் நீர்வெறுப்பு நோயினால் 40 முதல் 50 பேர் வரை உயிரிழக்கின்றனர். இவர்களும் மிகவும் மோசமான பின்விளைவுகளைச் சந்தித்த பின்பே மரணமாக வேண்டிய நிலை உருவாகின்றது. இலங்கையில் வாழ்பவர்களில் எட்டுப் பேரில் ஒருவருக்கு ஒரு நாய் வீதம் உள்ளது என கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என நீர்வெறுப்பு நோய்த்தடுப்பு வேலைத் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் ஹரிச்சந்திர தெரிவித்தார்.

ஒரு வருடத்திற்கு 12 இலட்சம் நீர்வெறுப்பு தடுப்பூசிகள் நாய்களுக்காக பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தடுப்பூசிகளை நாய்களுக்கு கொடுக்க வேண்டும்.

நீர்வெறுப்பு நோய் மிக விரைவில் உடல் முழுவதும் பரவக்கூடியதென்பதால் நாய்க்கடிக்குள்ளான ஓரிரு நிமிடங்களிலேயே சிகிச்சை பெறவேண்டும் என்றும் டாக்டர் ஹரிச்சந்திர தெரிவித்தார். இந்த நோய் உடலில் பரவும் போது நரம்பு மண்டலத்தைப் பாதித்து மூச்சுத் திணறலை ஏற்படுத்தும். துடித்தல், எச்சில் வடிதல் போன்றன நோயின் அறிகுறிகளாகும்.

நோயாளியின் அருகில் இருப்பவருக்கும் தடுப்பூசி போட வேண்டும். என்றும் டாக்டர் ஹரிச்சந்திர குறிப்பிட்டார்.

# படகில் பயணித்த வேளையில் 100 மியன்மார் பிரஜைகள் மரணம்



தொலைவில் படகொன்றில் தத்தளித்துக் கொண்டிருந்த 32 பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டனர்.

இவர்களுடன் குறித்த படகில் பயணித்த 98 பேர் உணவு, குடிநீர் இன்றி நடுக்கடலிலேயே உயிரிழந்த நிலையில் அவர்களின் சடலங்கள் கடலில் வீசப்பட்டுவிட்டதாக உயிர்தப்பிய மியன்மார் நாட்டைச்சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் கடற்படையினரால் மீட்கப்பட்டு காலி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்ட 32 பேரும் காலி கராப்பிட்டிய மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தம்முடன் பயணித்தவர்களில் மேலும் 100 பேர்வரை நடுக்கடலிலேயே உயிரிழந்துவிட்டதாக் காப்பாற்றப்பட்ட மியன்மார் நாட்டைச்சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டவர்களே மேற்கண்டவாறு தெரிவித்தனர் என பி.பி.சி. செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கரையிலிருந்து சுமார் 250 கடல் மைல்கள்

# 10 துப்பாக்கிகளுடன் ஒன்பது பேர் கைது

(மன்னார்)

மன்னார், விடத்தல் தீவு பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 10 துப்பாக்கிகளுடன் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் காட்டு விலங்குகளை வேட்டையாடி விற்கும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் என பொலிஸாரது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்கேநபர்களை மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 40 முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைப்பு

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட மேலும் 40 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் நேற்று சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் வவுனியா - மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு வருட பயிற்சியைப் பூர்த்தி செய்த முன்னாள் போராளிகளே நேற்று பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் படையினரிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை சமூகமயப்படுத்தப்படும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

தற்போது புனர்வாழ்வு நிலையங்களில் சுமார் 360 முன்னாள் போராளிகள் மாத்திரமே பயிற்சி பெற்று வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

இவர்களுக்கான பயிற்சிக் காலம் நிறைவு பெற்றதும் அவர்களை குடும்பத்தினருடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

# 15 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நேற்று முதல் உடனடி இடமாற்றம்

## யாழ்.மாவட்டத்திற்கும் புதியவர் நியமனம்

(கொழும்பு)

யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா உட்பட 15 பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் 15 பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா பொலிஸ் மாஅதிபர் மற்றும் கட்டுப்பாட்டு பிரிவுக்கும் திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ரவி விஜேகுணவர்தன குற்றம் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவுக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கே.எச்.ஜயவீர பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என். டி.தளுவத்த காலி மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் என்.ஏ.யூ.மத்தநாயக்க ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஆர். வைத்தியலங்கார மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பு மத்திய பகுதிக் குப் பொறுப்பாக இருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.கே.பீ. பெரேரா அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ள அதே வேளை, பிரதி பொலிஸ் மாஅதிபர் பி.பீ.ஐ,கருணாரத்ன காணி முகாமைத்துவ பிரிவி லிருந்து யாழ்.மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

காலி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஆர்.ஏ.என். ஆர். பத்மசிறி அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து பொலன்னறுவை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபரான எச்.டி.கே.எஸ்.ஜயசேகர கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபரான டபிள்யூ.டபிள்யூ.எச்.எஸ். விக்கி ரமசிங்க வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும், கண்டி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரான டபிள்யூ.ஏ.பீ.டி.பீ.கனேகம புத்தளம் மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் நுகேகொடை பகுதிக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மாஅதிபர் கே.ஈ.ஆர். பெணாண்டோ மொனராகலை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

விசாரணை பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபரான வீ.இந்திரன் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், களனிப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபரான எஸ்.மஹேஷ் பெரேரா திருகோணமலை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

# அமைச்சரவைய்ய குறைத்தால் ஊழல்மோசடியை ஒழிக்கலாம்

## பிக்குமார் சங்கம் ஆலோசனை

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அமைச்சரவையை குறைப்பதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. அமைச்சரவையை 13 ஆக குறைத்தால் நாட்டில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச்செயல்களை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான ஐக்கிய தேசிய பிக்குமார் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சங்கத்தின் பிரதம செயலாளர் வண.தின்யாவல பாலித்த தேரர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு காரணமாகவிருந்த யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவந்து பிரபாகரனை கொன்றொழித்தல், முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை சிறையிலடைத்தமை மற்றும் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்கியமை ஆகியவற்றை ஜனாதிபதியினால் செய்யமுடியுமாயின் தன்னுடைய அமைச்சரவையை ஏன்13 ஆகக் குறைக்கமுடியாது என்றும் அவர் வினவினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.